www.padippakam.com

# தமிழ்நேயம்

இதழ் - 5 டிசம்பர் 98



எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத
தமிழென்று சங்கே முழங்கு

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் வழிக்கல்வி - சில கேள்விகள்

ஆங்கிலேய ஆட்சி காலத்திலேயே, பள்ளிகளில் தமிழ்பயிற்சி மொழியாக சிறப்பாக அமைந்தது. 50 ஆண்டுகளுக்கு முன், தமிழ் வழிப்பாடக் கல்விக்கு தற்போதுள்ளது போல எதிர்ப்பு இல்லை. கிருத்துவச் சமய அமைப்புக்களால் நடத்தப்பட்ட பள்ளிகளிலும் தமிழ் வழிக் கல்விக்கு எந்த வகையான எதிர்ப்பும் இருந்ததில்லை.

இப்பொழுது ஆங்கிலப் புலமை வளர, ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்பது வடிகட்டிய புரட்டுவாதம். தமிழ் வழிக் கல்வி கற்றவர்களின் ஆங்கில அறிவு ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களின் ஆற்றலைவிட எந்த வகையிலும் குறைந்ததில்லை. தமிழைப் பயிற்சி மொழியாக்க விரும்புவோர், ஆங்கிலக் கல்விக்கு எதிரிகள் என்று பேசுவது முட்டாள் தனம். ஆங்கிலம் ஒரு மொழியாக பன்னாட்டுத் தொடர்புக்கு இணைப்புச் சங்கிலியாக பள்ளி/கல்லூரிகளில் கட்டாயம் கற்பிக்கவேண்டும் என்பதில் தமிழர்களிடம் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக பள்ளிகளில் கற்று தற்போது தேறுபவர்களுக்கு ஆங்கிலமோ, தாய்மொழியோ சரியாகப் பேசவோ எழுதவோ தெரிவதில்லை. தற்போது உள்ள பாட முறைகளில், தமிழ்நாட்டில் பிறந்து வளர்பவர்கள், தமிழே கற்காமல், படிப்பை முடிக்கும் நிலை உள்ளது. இது தமிழர்களை ஏமாளிகள் ஆக்குகிறது. தமிழில் தேவையான பாட நூல்கள் இல்லை என்பது ஒரு நொண்டிச் சாக்கு. 30 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட தமிழ் பாட நூல்கள் என்னவாயின? இடைக் காலகட்டத்தில் அறிவியல், மருத்துவம், சட்டம் தொடர்பான துறைகளில் பல கலைக்களஞ்சியங்களும், மொழி பெயர்ப்பு நூல்களும், அகராதிகளும் வெளிவந்துள்ளன. இவை என்னவாயின?

பிழைப்புக்காகத் தமிழ்நாட்டை நாடிவந்தவர்கள் தமிழ் மொழியின் மேல் மதிப்போ, பற்றோ இல்லாத கயவர்களே. இவர்கள் தான் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதை எதிர்ப்பவர்கள். பிற மாநிலங்களில் மாநில மொழி கட்டாய பாடமாக நடைமுறையில் உள்ளது. வட மாநிலங்களில் பல இந்தி அல்லது வட்டார மொழிகளை மட்டுமே கல்வி மொழியாக வைத்துள்ளனர். ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கூட அவர்கள் ஏற்பதில்லை. "ஆங்கிலம் ஒழிக" என்பது முழக்கம். மக்களாட்சி உரிமைகளைப் பற்றித் தமிழ் நாட்டில் பேசுவோர் வேறு மாநிலங்களிலுள்ள நிலைமையைப் பற்றி சிந்திக்க மறுக்கின்றனர். மற்ற மாநிலங்களிலுள்ள சூழ்நிலை அவர்களுக்கு ஏற்புடையதாக இருப்பின் அங்கு இவர்களுக்கெல்லாம் வேறு மாநிலங்களில் குடிபெயர்ந்துள்ள தமிழர்களுக்கு மொழி வாய்ப்பு உரிமைகள் மிகக் குறைவே.

– **நாராயணசாமி**

("திருக்குறள் - காலக் கண்ணாடியில் புதுப் புதுத் தோற்றங்கள்" நூலாசிரியர்)

படிப்பகம்

www.padippakam.com

1

# தமிழ் நேயம்:
# ஆசிரியர் உரை

நாம் நடுத்தெருவில், முச்சந்தியில் நிற்கிறோம். செல்லவேண்டிய திசைகளும் கூட அடைபட்டிருக்கின்றன. தகர்த்துக் கொண்டுதான் செல்லவேண்டிய நிலை. நமக்கு மனத்தில் உறுதியில்லை. பின் இழுப்பவர்களும் கூடவே வந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் நாம் என்ன செய்யப் போகிறோம்? இப்படியே நெடுநாள் இருக்கமுடியாது.

ஆதிக்க அமைப்புகள் நுகர்வியம் என்றும், பணம், பதவி என்றும் உயர்கல்வி என்றெல்லாம் கூறி நம்மைச் சிறைப்படுத்தி இருக்கிறார்கள். நாம் நடுத்தர வர்க்கப் படிப்பாளிகள், இலக்கியவாதிகள். அரசியல் கட்சிகளின் ஓரங்களிலோ உள்ளோ இருப்பவர்கள். நமக்குத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை மீறி நாம் சிந்திக்க முடியாது. நமக்குக் கீழ் அடித்தள மக்கள் என்ற முறையில் பெரும் திரளான மக்கள் வாழ்கிறார்கள். வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நாம் எடுத்துக் கொள்ளுகிறோம் நம்மை அழகுப்படுத்திக் கொள்கிறோம். நமது பணம், படிப்பு, பதவி முலியவைகளெல்லாம் அவர்களுக்கு உரியவைகளிடமிருந்து எடுத்துக் கொண்டவை. அவர்களுக்கு நாம் கற்பிக்கிறோம். அவர்களை வழி நடத்துவதாகச் சொல்கிறோம்.

ஆதிக்கத்தில் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் முறையில் அடித்தள மக்களுக்கு நாம் கல்வி தருகிறோம். கற்பிக்கிறோம். ஆதிக்கச் சக்திகளை வலுப்படுத்தும் செயலை, அழகுபடுத்தும் செயலை அரசு ஊழியர் என்ற முறையிலும் கல்வியாளர் என்ற முறையும் கலை இலக்கியவாதி என்ற முறையிலும் நாம் செய்கிறோம். எப்பொழுதாவது மனச்சாட்சி நம்மைக் குடையும் என்றால் கொஞ்சம் இயற்கை நாசம் என்று பேசுவோம். புரட்சி என்று சொல்வோம். இசையில் மனத்தைப் பறி கொடுப்போம் இலக்கியத் திறனாய்வு என்போம். தியானம் செய்வோம் மனச்சாட்சி வாலைச் சுருட்டி உறங்கிவிடும். அடித்தள மக்களின் அலறல் நமக்குக் கேட்காது.

இப்படித்தான் நமக்கு வாழ்க்கை அமைந்திருக்கிறது. முதலில் நமக்குத் தேவைப்படுவது விழிப்புணர்வு. விழித்துக் கொண்டு பார்க்கும் பொழுதுதான் நடுத்தெருவில், முச்சந்தியில் நாம் செல்லும் திசை இல்லாமலிருப்பதை உணர்கிறோம். தகர்ப்பை முதலில் நமக்குள்ளிருந்து தான் தொடங்கியாக வேண்டும். நமக்குள் இருக்கிற திரைகளைக் கிழித்து எறியவேண்டும். முகமூடிகளைக் களைளந்து கொள்ளவேண்டும். நம்மை இப்படிச் செய்தவர் யார்? என்று சிந்திக்க வேண்டும். அடித்தள மக்களின் மீது நாம் அமர்ந்திருக்கிறோம் என்பதை ஓர் அவமானம் என்று உணரவேண்டும். ஆதிக்கச் சக்திகள் நமக்குள் திணித்திருக்கிற நுகர்வு வெறியை, ஆதிக்கவெறியை, உடைமை வெறியை களைந்து கொள்ள முனைய வேண்டும்.

நம் பெயரில் இருக்கும் உடைமைகள் நம்முடையவையல்ல. நம் அறிவு வரலாற்றின் வழியே நமக்குள் வந்து சேர்ந்தது. இந்த அறிவுக்கு

படிப்பகம்

www.padippakam.com



நாம் உடைமையாளர்கள் அல்ல. நமக்கிருப்பதாக நாம் நம்பும் திறன்கள் சமூகம் நெடுங்காலமாகத் தனக்குள் வளர்த்துக் கொண்டத் திறன்கள். நமது ஆக்கத்தில் வானத்திற்கும் பூமிக்கும், கதிரவனுக்கும் கடல்களுக்கும் பங்குண்டு. உயிர்களும் பயிர்களும் நம்மை வளர்க்கின்றன. உழவர்களும், கைவினைஞர்களும் இப்படி உழைக்கும் மக்கள் அனைவரும் நமக்கு வாழ்வு தந்தவர். இவர்களைத் தெய்வம் என்று சொல்வதில் தவறில்லை. வரலாற்றில் இருந்து இவர்களை ஒதுக்கி ஓரங்களில் தள்ளிய அரக்கர்களுக்கு நாம் சேவை புரிய முடியாது. இப்படித் தொடங்கினால் செல்லும் திசைகள் நமக்கு திறக்கும். நமக்குள் ஆயிரம் பூக்கள் மலரும். வரலாற்றையோ, இலக்கியத்தையோ, மனிதர்களையோ, உயிர்களையோ, வானத்தையோ, மண்ணையோ கற்கும் முறை இதுதான். இந்த நேயம் தான் நம்மை வாழவைக்கும். எல்லோர்க்கும் உரியது இந்த உலகம். அன்பில் தழைப்பது இந்த வையம். இதற்குத்தான் மனித நேயம் என்று பெயர். இதன் மறுபெயர் தமிழ்நேயம். தமிழ் என்பது இந்த நேயத்தைக் கற்பது தான்.

## விடுதலை மலர்த்தும்

சம்மட்டி விழுந்து விழுந்துதான்
இரும்பு நீண்டு ஈட்டியானது
விரிந்த வானில் விழுந்த துளிகள்தான்
பேராறாகப் பாயும்

பூ பிஞ்சாகி காய் கனியாகி
விழுந்து வாயில் இனிக்கிறது
தளிர்த் தண்டுக் கால்கள் விழுந்து விழுந்துதான்
பாதம் ஊன்றிப் பயணிக்கும்

புதைந்த விதைகள் தோட்டமாகித் தோப்பாகி
விளைவாகி வீடு வரும்
புதைந்த வேர்கள் நீண்டு நீருறிஞ்சி
வள வனமாகும்

புதைந்த சருகுகள் உரமாகும்
கொம்புகள் மரமாகும்
புதைந்து புதைந்துதான்
மரக்கட்டை வைரமாய் மின்னும்
இலை தழை எரிபொருளாய் கிளம்பும்

ஆம்;
புதைந்த எம் வீரர்களால்
புதுக்கவிதை தொடங்கும்!
விழுந்த எம் வேங்கைகள்
விடுதலை மலர்த்தும்!

–கி. சிதம்பரன்

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ்நேயம்: அகமும் புறமும்

# பள்ளிகளில் தமிழ்

## முதல்வரின் அறிக்கை - சில திறனாய்வுகள்

நவம்பர் 15-ஆம் நாள் கோவைப் பகுதி கணபதியில் தமிழக முதிர்ந்த சிந்தனையாளர் பேரவையில் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய உரை மறுநாள் காலையில் தினமணி நாளிதழில் விரிவாக இடம் பெற்றது. இந்த உரை திராவிட இயக்கத்தைக் குற்றம் சாட்டுகிறது. திராவிட இயக்கம் தமிழை வளர்ப்பதில் தடுமாறுகிறது. ஆங்கில ஆதிக்கத்தைத் தமிழக அரசு வளர்க்கிறது. கவிஞர் சிற்பி அவர்களின் இந்த உரை தமிழகஅரசுக்கு ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. அடுத்த சிலமணி நேரங்களுக்குள் முதல்வர் ஓர் அறிக்கை வெளியிட்டார். தமிழ் மொழியை ஒரு பாடமாக ஏற்றுக் கொள்ளாத கல்வி நிலையங்களுக்குத் தமிழக அரசின் ஏற்பு இனி இல்லை என்று அந்த அறிக்கையின் முதல் வாசகம் கூறுகிறது. இந்த அறிக்கை சில கூறுகளில் நமக்குக் குழப்பம் தருகிறது. இது குறித்துப் பிறகு பார்க்கலாம்.

மொழிவாரி அடிப்படையில், சென்னை மாகாணம் பல மாநிலங்களாகப் பிரிந்த நவம்பர் முதல் நாளைக் கர்நாடக மக்கள் மிகுந்த ஆவேசத்துடன் கொண்டாடுகிறார்கள். இத்தகைய கொண்டாட்டத்தில் தமிழக அரசுக்கு ஈடுபாடு இல்லை. என்ன காரணம் என்பது புரியவில்லை. ஆனால் தமிழ் நலத்தைக் காப்பதற்கெனச் சில தமிழ் அறிஞர்களும் தமிழ் இயக்கத்தாரும் தோற்றுவித்த தமிழ்ச்சான்றோர் பேரவை, நவம்பர் முதல் நாளைக் கொண்டாடும் முறையில் சென்னையில் பெரிய அளவில் விழா நடத்துகிறார்கள். தமிழ் உணர்வு இந்த விழாவின்போது பெருக்கெடுத்து ஓடத்தான் செய்கிறது. தமிழ் வளர்ச்சியில் தமிழக அரசு அக்கறை காட்டவில்லை என உண்மைத் தமிழ் அறிஞர் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும் இருந்த பொழுதிலும் தமிழக அரசுக்கு எதிராக இவர்கள் கடுமொழி எதனையும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் இந்த ஆண்டு இவர்கள் ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அடுத்த ஆண்டு தமிழகத்தில் உள்ள எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு கட்டாயப் பாடமாக இடம்பெறும் முறையில் ஆணையிடத் தமிழக அரசு முற்படவில்லை என்றால் தமிழ் உணர்வாளர்கள் நூறு பேர் சாகும் வரை உண்ணாநோன்பை மேற்கொள்வர் என்பது தீர்மானம்.

சாகும் வரை உண்ணாநோன்பு என்பது கடுமையான செயல்முறை என்பதில் ஐயமில்லை. தொடக்கப் பள்ளியில் தமிழ் ஒரு கட்டாயப் பாடம் என்பது மிக மிக மென்மையான ஒரு முயற்சிதான். மேல் நிலைப்பள்ளி முடியத் தமிழ் ஒரு கட்டாயப் பாடமாக அமைவதென்பது கூட ஒரு கடுமையான தீர்மானமாக இருக்க முடியாது. பள்ளிகள் அளவில் அனைத்துப் பாடங்களும் தமிழில் என்பது ஒரு சரியான தீர்மானமாக அமையலாம். இதன் பிறகு கலை, அறிவியற் கல்லூரிகளிலும்

படிப்பகம்

www.padippakam.com



மருத்துவ, பொறியியற் கல்லூரிகளிலும் தமிழின் இடம் ஏது? என்பது குறித்தும், நமக்குத் தெளிவு இருக்க வேண்டும்.

தமிழ்ச் சான்றோர் பேரவையில் கடுமையான உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டன என்ற பொழுதிலும் இறுதியில் இந்த மென்மையான தீர்மானம் தான் நிறைவேற்றப்பட்டது. சாகும்வரை உண்ணாநோன்புக்கு இளைஞர்கள் பலர் துடிப்போடு முன்வந்தனர். மரியாதைக்குரிய சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள் சாகும்வரை உண்ணாநோன்புக்கு உடன்பட்டார். இந்தத் தீர்மானத்திற்காக அவரைச் சிலர் காய்ந்தனர் என்ற பொழுதிலும் எத்தனை காலம் தமிழக அரசையும், கலைஞரையும் இவர் நம்பியிருந்தார் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும் பொழுது இவரைக் குறை சொல்பவர்களின் அரசியல் நோக்கம் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் அழிந்தாலும் தமிழக அரசைத் தாம் வாழ்த்திக் கொண்டே அழியவேண்டும் என்பது இவர்களின் அரசியல், தமிழக மக்களின் தன்மானத்தை அழிக்கிற அரசியல். இது நாற்காலி அரசியல். இவர்களுக்குக் காவிரி வேண்டாம். ஈழத்தின் விடுதலை தேவையில்லை. இவர்கள் நாசகார அரசியல்வாதிகள். இத்தகைய அரசியல்வாதிகளின் எல்லைக்குள்ளிருந்து சிலம்பொலியார் போன்றவர்கள் எப்பொழுது விடுதலை பெறுவார்கள் என்று நாம் காத்திருந்தோம். சிலம்பொலியாரைப் போலவே இன்னும் பலரின் விடுதலையை நாம் எதிர்ப்பார்க்கிறோம்.

தமிழ் சான்றோர் பேரவை நிறைவேற்றிய இந்த மிக எளிய தீர்மானம் குறித்து உடனடியாகத் தமிழக அரசு என்ன செய்திருக்க வேண்டும்? அவர்களை அழைத்துப் பேசியிருக்க வேண்டும். தமிழக அரசு இப்படிச் செய்யவில்லை. காரணம் என்னவாக இருக்க முடியும். இவர்கள் இதுவரை நம் கால்களைச் சுற்றி வந்தவர்கள். இவர்கள் உண்ணாநோன்பு இருக்கப் போகிறார்கள். அப்படியே இருக்க நேர்ந்தாலும் அன்புத் தமிழால் இவர்களைச் சமாளித்து விடலாம்; இப்படி அரசு கருதியதா? இதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் தமிழ்ச் சான்றோர் பேரவையைப் பொருட்படுத்தாத தமிழக அரசு சிற்பி அவர்களின் உரையைப் பொருட்படுத்தியது. இதற்காகத் தமிழக அரசை நாம் பாராட்டுகிறோம். தினமணியில் இந்த உரை இவ்வளவு விரிவாக இடம் பெறவில்லை என்றால் தமிழக அரசு வழக்கம் போலவே கண்டும் காணாதது போல் இருந்திருக்கும். சிற்பியின் உரைக்காக மட்டுமல்லாமல் தினமணியின் தமிழ் உணர்வுத் தீவிரத்தையும் புரிந்து கொண்டுதான் தமிழக அரசு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்க வேண்டும் இது மட்டுமன்று. சிற்பி அவர்கள் வெளிப்படுத்திய உணர்வுகள், இலட்சக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் நெஞ்சங்களில் சில பத்தாண்டுகளாகக் குமுறிக் கொண்டிருந்த உணர்வுகள். இந்த எரிமலையின் ஒரு தெறிப்புத்தான், சிற்பியின் உணர்வு.

தமிழக அரசு இதைப் புரிந்து கொள்ள முடியுமென நாம் நம்புகிறோம். வரலாற்றிலிருந்து திராவிட இயக்கம் விலகிக் கொண்டிருக்கிறது என்பதை இவர்கள் புரிந்து கொள்வார்கள் என நாம் நம்புகிறோம். தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தோற்றம் பெற்று, சில கோடித் தமிழர்களின் உணர்வுகளில் மிதந்து தமிழ் வாழ்வின்

படிப்பகம்

www.padippakam.com

# 5

அனைத்துக் களங்களிலும் விடுதலைக்காக ஏங்கிய மக்களுக்கு ஓர் உதய சூரியனாய் நின்று, ஆனால், இறுதியில் தமிழ் மக்களை ஏமாற்றியதோடு, தமிழ் மக்களை அடிமைப்படுத்துகிற இயக்கமாகத் திராவிட அரசியல் இயக்கம் தனக்குள் இறுகிவிட்டது. கண்டு நாம் வேதனைப்படுகிறோம். பொருமுகிறோம். இந்த இயக்கத்தின் அழிவு குறித்து நாம் கவலைப்படுகிறோம். இந்த இயக்கத்தின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் நாம் இணைந்திருந்தோம். நம்மை ஏமாற்றிய இயக்கத்தை நாம் காயத்தான் செய்கிறோம். உரிமையோடு இதைச் செய்கிறோம்.

இனி முதல்வர் வெளியிட்ட அறிக்கை குறித்துச் சிலவற்றைச் சொல்லலாம். தமிழகத்தில் தமிழ்க் குழந்தைகளை நாசம் செய்வதற்கு எனக் கடந்த சில ஆண்டுகளுக்குள் ஊர்கள் தோறும் தெருக்கள் தோறும் தோன்றியவை 30,000க்கும் மேற்பட்ட மழலையர் ஆங்கிலப் பள்ளிகள் ஒரு வேளை முதல்வரின் அறிக்கையில் உள்ள முதல் வாசகத்தை ஏற்றுக் கொள்ளலாம். அதாவது தமிழை ஒரு பாடமாக நாங்கள் வைத்துக் கொள்கிறோம். ஆனால் பிற பாடங்கள் ஆங்கிலத்திலேயே இருக்கட்டும் என்று அவர்கள் பேரம் பேசலாம். வழக்கு மன்றத்திற்குச் செல்லலாம்.

அப்படிச் சொல்ல நேர்ந்தால் தமிழக அரசு என்ன செய்யும்? இந்தப் பள்ளிகளை நிறுவியவர்கள் இவை பள்ளிகள் கூட அல்ல. பள்ளி என்றால், மாணவர்களுக்குத் தேவையான அளவு கட்டிடம், விளையாட்டுத் திடல், உரிய ஊதியத்தோடு ஆசிரியர்கள், பிற வசதிகள் இருக்க வேண்டும். பெரும்பாலான பள்ளிகளில் இப்படி இல்லை. பள்ளி நிர்வாகிகள், வணிகர்கள். வணிகத்தில் பள்ளி நடத்துவது ஒரு வகை. அஸ்பெஸ்டாஸ் கூரையின் கீழ் மாணவர்களை அடைத்துவைத்துப் பணம் பறிக்கும் கொள்ளைக்காரர்கள் இவர்கள். ஆசிரியர்களின் தன்மானத்தை அழிக்கும் கயவர்கள் இவர்கள். இவர்கள் லும்பன்கள் இவர்கள் அதிகாரிகளுக்கு ஏதோ வழங்கிவிட்டு நிர்வாகிகள் ஆனவர்கள். இவர்கள் தான் ஆங்கிலப் பித்தைத் தமிழ் மக்களுக்குள் ஏற்றுபவர்கள். கல்வி செலவிடப் பணம் இல்லையென்று பொய் சொல்லி, எல்லாவற்றிலும் கைவைக்கும் அரசியல் வாதிகள் தாம் இவர்களை வளர்த்தார்கள். கள்ளி மரங்களை வளர்த்து விட்டு இவற்றிடம் நாம் எந்தக் கனிகளை எதிர்பார்க்கமுடியும்?

முதல்வரின் அறிக்கை, அறிவியல் தவிர எட்டாம் வகுப்பு முடியப் பிற பாடங்கள் தமிழில் இருக்க வேண்டும் என்கிறது. அறிவியலைத் தமிழில் கற்றுத்தர வேண்டாம். கணிதத்தை எப்படிக் கற்றுத் தரமுடியுமென்று தமிழ்க் கல்வியின் பகைவர்கள் கேட்கிறார்கள். ஒன்பதாம் வகுப்புத் தொடங்கி அறிவியல் மட்டுமல்லாமல் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்தில் இருக்குமென்பது முதல்வர் அறிக்கையில் சொல்லாமல் சொன்ன உண்மை. சரிதானா? மெட்ரிக் பள்ளிகள் தொடரும். இப்படி எத்தனையோ கேள்விகள் நமக்குள் எழுகின்றன.

தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற தமிழக அரசின் முயற்சி வெற்றி பெறுமானால் நமக்கும் மகிழ்ச்சிதான். அனுபவத்தின் அடிப்படையில் இப்போது சொல்லிவிடலாம். தமிழக அரசின் நோக்கம்

படிப்பகம்

www.padippakam.com



குறித்து நாம் ஐயப்படுகிறோம். யானைப் பசிக்கு இது சோளப் பொரி. தமிழ்ச் சான்றோர் பேரவை கேட்ட மிக மிகக் குறைந்த கோரிக்கைக்குத் தமிழக அரசின் பதில் இவ்வளவு தான் என்றால் தமிழ்ச் சான்றோர் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும். ஆயிரம் பேர் தம்மைப் பலி கொடுத்தால்தான் தமிழ் வாழும் என்றால் அதை நாம் இனிச் செய்வோம்.

## வழிபாட்டில் தமிழ்

சமக்கிருதம் தான் தெய்வ மொழி. தமிழ் தெய்வ மொழி அன்று. தமிழில் வழிபாடு செய்தால் தெய்வம் தீட்டுப்படும். சூத்திரர்களின் மொழி தெய்வம் ஏற்காது. இப்படி ஒரு குரல் தமிழகத்தில் எழுந்திருக்கிறது. சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே 1963ல் உச்சநீதிமன்றம் தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்பதை ஏற்றுக் கொண்டு இருக்க, இதற்கு எதிராக இப்பொழுது உயர்நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றிருக்கிறது. இது ஒரு வினோதம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும்? உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு இந்த வழக்கு வரும் முதல் நாளிலேயே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம் (ஒரு வேளை மீண்டும் உச்சநீதி மன்றம் வரை இந்த வழக்கு எடுத்து செல்லப்படுவதாக வைத்துக் கொண்டால் இந்தத் தேசம் குறித்து நாம் கொண்டாடுவதற்கு ஏதுமில்லை என்று இப்பொழுதே சொல்லிவிடலாம். இப்படி எதுவும்நடைபெற்று விடாது என்பதுதான் இப்பொழுது நம் நம்பிக்கை) சுந்தரர், சம்பந்தர், நாவுக்கரசர் முதலிய சான்றோர்கள் செய்த அருந் செய்யுள்களைத் தமிழின் தெய்வத் தன்மைக்கு நம்மவர் சான்றுகளாகச் சொல்லலாமென்றே வைத்துக் கொண்டாலும் இவற்றை நீதிமன்றம் எந்த வகையில் ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியும் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆகவே தெய்வத்திற்கும் மொழிக்கும் தொடர்பு படுத்துவதை நீதிமன்றம் ஏற்க முடியாது. இதன் காரணமாகவும் வழக்குத் தள்ளுபடி செய்யப்படலாம். அல்லது மரபுகளை நாம் மறுக்க வேண்டியது இல்லை என்று சொல்லி ஏராளமான கதைகளைத் திரட்டி நீதிமன்றம் அதற்குள் அமிழ்ந்தும் போகலாம்.

உச்சநீதி மன்றம் ஏற்கனவே நமக்கு ஓர் உண்மையைக் கற்பித்திருக்கிறது. அர்ச்சகராகும் உரிமை சூத்திரர்களுக்கு இல்லை. இந்த உண்மையின் அடிப்படையில் கடவுள் உயர்சாதி. கடவுளுக்கும் சாதி உண்டு. தன்னைத் தொட்டு வழிபடும் உரிமை தாழ்ந்த சாதிகளுக்கு இல்லை. கருவறைக்குள்ளும் சாதியை ஏற்கிறது உச்ச நீதிமன்றம். சமத்துவம் குறித்து அரசியற் சட்டம் என்னதான் கூறினாலும் கடவுளுக்கு முன்னர் மனிதர்கள் சமமானவர்கள் இல்லை. இதே போக்கில் உச்சநீதி மன்றமும் சிந்திக்குமானால் நாம் என்றைக்குமே இந்தத் தேசத்தில் மனிதர்களாக வாழ முடியாது. இந்துத்துவம் என்பது வாழ்க்கை முறை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதையும் இங்கு நினைவு கொள்கிறோம். கூடவே ஒரு வருத்தம். இப்பொழுது பெரியார் இல்லை. அம்பேத்கார் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

# 7

நீதி மன்றங்களில் என்ன நடைபெறும் என்பது குறித்து இப்பொழுது நம் கவனம் குவியவேண்டியதில்லை. வெளியில் என்ன நடக்கிறது என்பது குறித்து இப்பொழுது நாம் கவலையோடு சிந்திக்க நேர்ந்திருக்கிறது. இந்துத்துவச் சக்திகள் இப்பொழுது சில கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். இந்தச் சிக்கலில் கடவுள் நம்பிக்கையாளர்கள் பேசுவதற்கு நியாயம் இருக்கிறது. ஆனால் தெய்வ நம்பிக்கை அற்றவர்கள் நாத்திகர்கள், கம்யூனிஸ்டுகள், இந்து மத எதிர்ப்பாளர்கள் பேசுவதற்கு என்ன நியாயம் இருக்கிறதென்று இவர்கள் கேட்கிறார்கள்.

நாம் தமிழ் நாட்டில் வாழ்கிறோம். எல்லா அரங்குகளிலும் தமிழ் தனக்குரிய மரியாதையைப் பெற வேண்டுமென்று விரும்புகிறோம். எதிலும் தமிழ் என்பது நம் கொள்கை என்பதைச் செயற்படுத்தாதவர்களோடு நாங்கள் முரண்படுகிறோம் போராடுகிறோம் இதன் காரணமாகத்தான், தமிழக் கோயில்களில் தமிழ்வழிபாடு தேவை என்று கேட்கிறோம். சமக்கிருதத்தை அகற்ற வேண்டும் என்று கூட நாங்கள் கேட்பதிலுள்ள நியாயத்தை மற்றவர் மறுக்கமுடியாது எனினும், நாங்கள் கேட்கவில்லை. தமிழிலும் வழிபாடு செய்யப்படும் என்று எழுதிவைப்பது கூட எங்களைக் கேவலப்படுத்துகிறது. இடையில் ஒன்றைச் சொல்லி வைப்போம். இந்து முன்னணித் தலைவர் இந்தச் சிக்கலை மக்களின் வாக்கெடுப்பிற்கு விட நீங்கள் தயாரா என்று கேட்கத்தான் செய்தார். எத்தனை நம்பிக்கை அவருக்கு. எங்களுக்கு வியப்பாகத்தான் இருந்தது. தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்வதைப் போல நவம்பர் 27 இல் தமிழ் நாட்டிலுள்ள 10 பெருங் கோவில்களில் வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தார். (பேரூர்க் கோயிலில் முன்பு நடந்த வாக்கெடுப்பைக் கலைத்துவிட மூர்க்கத்தனமாகச் சில இளைஞர்கள் முயற்சி செய்ததை இங்குக் குறித்து வைக்கிறோம்) விளைவு என்னவாக இருந்தது. நாங்களே கூட எதிர்பார்த்ததற்கு அதிகமாக 95.5 சதம் தமிழுக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். முற்றிலும் வடமொழிக்கு ஆதரவாக மூன்றே மூன்று சதம் இப்படி வாக்களித்தவர்கள் அனைவரும் பார்ப்பனராகத்தான் இருக்க முடியுமென்று நாங்கள் நம்பவில்லை. மக்களுக்குத் தமிழுணர்வு இல்லை என்று கருதிக் கொண்டிருக்கிற எங்களில் சிலருக்குக் கூட இது கண்திறப்பாக இருக்கிறது. (செருப்படியாக இது இருக்கிறது என்று சொன்னாலும் தவறில்லை) இத்தகைய எங்கள் தமிழ் மக்கள் தாம் ஆங்கிலத்தை விரும்புகிறார்கள் என்று சொல்வது எத்தகைய கொடிய கேலிக் கூத்து?

கோயில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்று நாங்கள் கேட்பதற்கு இந்த ஒரு காரணம் போதும் நாங்கள் நாத்திகர்கள், மார்க்சியர் என்ற முறையிலும் நாங்கள் சொல்லும் காரணத்தை இப்பொழுது முன்வைக்கிறோம்.

எங்கும் எதிலும் தெய்வம் இருக்கிறதென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்பது காலங் காலமாக நீங்கள் போற்றிவரும் வாசகம். இது உண்மை என்றால் தமிழுக்குள்ளும் தெய்வம் இருக்கிறது. நாத்திகர்களுக்குள்ளும் தெய்வம் இயங்குகிறது என்பதை நீங்கள் ஏன் மறுக்க வேண்டும்? பார்ப்பனருக்குள் இருக்கும்

படிப்பகம்

www.padippakam.com

8

தெய்வம் ஏன் பிற சாதியினருக்குள் இருக்க முடியாது? தெய்வத்திற்குக் காலம், இடம் என்ற வேறுபாடு இருக்க முடியாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், அப்படியானால் இசுலாமியருக்குள்ளும் கிறித்தவர்களுக்குள்ளும் இருக்கும் தெய்வத்தோடு நீங்கள் எப்படி முரண்பட முடியும்? சாதியோ, மதமோ, இனமோ கடவுளுக்கு உடன்பாடாக இருக்கமுடியாது ஆனால் சாதிக்குள், மொழிக்குள், இனத்திற்குள் கடவுளை அடைகிற நீங்கள் கடவுள் உண்மையை மறுக்கிறீர்கள் என்றுதான் சொல்ல முடியும். கடவுள் உங்களுக்குத் தெரியாது. உங்களை விடக் கடவுளைக் கீழானவர் என்று நீங்கள் கருதுகிறீர்கள். உங்கள் சாதி வெறியை, மொழி வெறியைக் கடவுளுக்குள் ஏற்றிக் காண்கிறீர்கள். நீங்கள் உண்மையான மதத்தினர் அல்ல. கடவுளுக்கு எல்லோரும் குழந்தைகள் என்றால் ஏற்றத்தாழ்வுக்கு அர்த்தமில்லை. ஆண்டான், அடிமை முறை கடவுளுக்கு எதிரானது. ஆகவே நாங்கள் இப்படி சொல்ல முடியும். சாதி, மதம், இனம், ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை ஒழிப்பவர் எவரோ அவர்தாம் கடவுள் உண்மையை நிலை நாட்டுபவர், சமத்துவத்தை நிலை நாட்ட முனைபவர், கடவுளை மனிதச் சமூகத்தினுள் செயல்படுத்துபவர். நீங்கள் கடைப்பிடிப்பது உண்மையான மதம் அல்ல. போலி மதம். மதவாதம் இதன் காரணமாகத்தான் கடவுளை நீங்கள் உங்கள் அளவில் குறைக்கிறீர்கள். உங்களுக்குள் சிறைப்படுத்துகிறீர்கள்.

நாங்கள் சொல்வதற்கு இன்னும் இருக்கிறது. வானம், பூமி, காற்று, நீர்நிலை, பயிர்கள், உயிர்கள் எல்லாவற்றினுள்ளும் நீங்கள் கடவுளைக் காண்கிறீர்கள். இவைதாம் உயிர்களையும், மனிதர்களையும் படைகின்றன. காப்பாற்றுகின்றன. இவற்றை அழித்து மீண்டும் உரமாக்குவதன் மூலம் புதிய உயிர்கள் தோன்றுகின்றன. கதிரவனும் நிலவும், வானமும், இவை போலவே நீரும், நிலமும், இயற்கையும் இல்லையென்றால் உயிர்கள் இல்லை. மனிதர் இல்லை. வரலாறு இல்லை. வாழ்க்கை இல்லை. இப்பொழுது சொல்லுங்கள். இவற்றோடு, இவற்றின் வழியே கடவுள் இயக்கத்தைக் காணும் நீங்கள் இவற்றை எப்படியெல்லாம் மாசுபடுத்துகிறீர்கள்! இராணுவம், வெடிகுண்டுகள், அணுக்குண்டுகள் என்று திரட்டிக் கொண்டு இவற்றை எப்படியெல்லாம் அழிக்கிறீர்கள்? இயற்கை மாசுபடக்கூடாது. மனிதர் நெஞ்சிலும் மாசு படியக்கூடாது. மாசற்ற மனத்தில் தான் தெய்வம் குடியிருக்கும். இப்படி நீங்கள் சொல்லுகிறீர்கள். உங்கள் மனத்திலிருந்தும் வாழ்விலிருந்தும் மாசுகளைத் துடைக்க நீங்கள் ஏன் முயற்சி செய்யவில்லை? கோயிலில் மட்டுமா தெய்வம் இருக்க முடியும்? கல்லில் தான் கடவுள் இருக்கிறார் என்பது உண்மையில்லை. வழிபட்டால் தான் தெய்வத்தின் கருணை கிட்டும் என்பது கூட உண்மையில்லை. மந்திரம் சொன்னால்தான் கடவுள் வசப்படுவார் என்பது பொய். தெய்வத்தை எங்கிருந்தும் வழிபடலாம்.

வழிபாட்டைத் தெய்வம் விரும்புகிறது என்பது கூட, உங்களைப் போலவே தெய்வத்தையும் நீங்கள் வரையறை செய்திருக்கிறீர்கள் என்பதைத்தான் காட்டுகிறது. தெய்வத்தை நீங்கள் மதிக்கவில்லை. உங்களுக்குத் தத்துவம் தெரியாது. அன்பு தெரியாது. உங்களுக்குள்

படிப்பகம்

www.padippakam.com

# 9

உங்களை ஆட்டி வைப்பது அதிகாரம், வெறி, பணம். உண்மையில் நீங்கள்தாம் நாத்திகர்கள். இப்படிச் சொல்வது கூட உங்களைப் பெருமைப்படுத்தி விடும்! நீங்கள் அழிவுச் சக்திகள்.

உலகம் மாசுபடுவதை நாங்கள் விரும்பவில்லை. வானமும் பூமியும் தூய்மையாக இருக்க வேண்டும். உயிர்கள் தளைக்க வேண்டும். உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் நேசம் வளரவேண்டும். அன்பு உலகை ஆள வேண்டும். இது எங்கள் உயிர்க் கொள்கை. தெய்வத்தை நாங்கள் மறுக்கிறோமா? தெய்வத்திற்கு நாங்கள் காணும் பொருள் என்னவென்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறாதா?

இன்னும் ஒரு குரல் இடையில் எழுகிறது. கடவுளை ஒப்புக் கொள்வது தமிழ்ப் பண்பாடு, இந்துப் பண்பாடு. கடவுளை மறுக்கிறவர்கள் தமிழர்கள் அல்லர், இந்துக்கள் அல்லர், இந்தியர் அல்ல. (இப்படிச் சொல்பவர்களைக் கருவறுக்க வேண்டும் என்று கோவையில ஒரு இந்துத்துவ அரசியல்வாதி பேசினார்). ஆழ்ந்த தத்துவ நோக்கில் பார்ப்பதை ஒதுக்கி விட்டாலும் சாதாரணமான வரலாற்று நூல்கள் கூடச் சில உண்மைகளைச் சொல்லுகின்றன. தமிழ்ப் பண்பாட்டில் கடவுளும் உண்டு. கடவுள் மறுப்பும் உண்டு. வேதத்தினுள்ளும் கடவுள் உண்டு. கடவுள் மறுப்பும் உண்டு. சாங்கியம், யோகம், மீமாம்சம், வைசேடிகம் முதலியவற்றினுள் கடவுள் மறுப்புக்கு இடம் உண்டு.

சமணமும், பௌத்தமும் இந்தியச் சமயங்கள் தாம். இந்துமதம் என்ற முரண்பாடுமிக்க ஒரு பெருந் தொகுப்புக்குள் எல்லாப் போக்குகளுக்கும் இடமுண்டு. கடவுளை எந்த வடிவத்திலும் வைத்துக் கொள்ளலாம். வழிபாடு செய்யலாம். கடவுளை மறுக்கலாம், எந்தச் சடங்கையும் மேற் கொள்ளலாம், மேற்கொள்ளாமலும் இருக்கலாம். கடவுளுக்கு ஆயிரம் வடிவங்கள்/பெயர்கள். கடவுளுக்குப் பெயர் இல்லை. வடிவம் இல்லை. குணம் இல்லை. இப்படி எத்தனையோ விளக்கங்கள் இந்து மதத்தினுள்ளும் இருக்கின்றன. உங்களுக்கு இந்துமதம் என்னவென்பது கூடத் தெரியாது. எந்த இடத்தில் நின்று கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள். அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள். நீங்கள் ஒரு துளி. நாங்கள் கடல். உங்களிடம் உண்மையில்லை.

இப்பொழுது உறுதியாகச் சொல்கிறோம், நாங்கள் மார்க்சியர். நாங்கள் நாத்திகர். இப்படி இருப்பதால் தான் எங்களுக்கு உண்மை தெரிகிறது. வரலாறு தெரிகிறது. தத்துவம் தெரிகிறது. நீங்கள் எங்களை மட்டுமன்று மக்களைக் கேவலப்படுத்துகிறீர்கள். பிளவுபடுத்துகிறீர்கள். சிந்திப்பதற்கு இன்னும் அவகாசம் இருக்கிறது. வன்முறையை நம்பி நீங்கள் வாழப் பார்க்கிறீர்கள். சமக்கிருதமா? தமிழா? என்ற சிக்கலைக் கிளப்பியதன் மூலம் சில உண்மைகளைச் சொல்லிக் கொள்வதற்கு இப்பொழுது நேர்ந்த வாய்ப்புக்கு நன்றி சொல்வோம்.

படிப்பகம்

www.padippakam.com

10

# இன்றைக்கும் என்றைக்கும் பெரியார்

பெரியார் நமக்கு இன்றைக்கும் என்றைக்கும் தேவை. இதற்காகப் பெரியாரை நாம் கற்க வேண்டும். எப்படிக் கற்பது என்பது கேள்வி.

இன்றைய சூழல் கடுமையான நெருக்கடிகள் உள்ளடங்கிய சூழல். சந்தைப் பொருளாதாரம் நம் தேசத்தை மட்டுமன்று நம் வாழ்வையும் உள்வாங்கி ஒடுக்கி அழிக்க முனைந்திருக்கிறது. பண வெறிக்கும் நுகர்வு வெறிக்கும் எல்லோரையும் ஆட்படுத்துகிறது. புறத்தில் நாம் காண்பதை முதலாளிய வளர்ச்சி என்று இன்று சொல்லமுடியாது. உலகளவிலான வல்லரசு ஆதிக்கத்திற்குத் தன்னை இழந்து கொண்டிருப்பது இந்த முதலாளியம். மக்களின் மனஉறுதியை வாழ்வை அறநெறிகளை அழிப்பதன் மூலம் தன்னை வலுப்படுத்திக் கொள்கிறது இந்த முதலாளியம். இவர்களோடு முழு அளவில் ஒத்துழைப்பவர்கள் அரசியல்வாதிகள். மேற்கத்திய நாகரிகந்தான் உலகிற்கான ஒரே வகை நாகரிகம் என்று சொல்லிப் பல்லாயிரம் ஆண்டுகளாக நமக்குள் தொடர்ந்து வரும் மரபுகளை அழிக்கிறது இந்த நாகரிகம்.

நவீன அறிவியலும் தொழில் நுட்பங்களும் இல்லாமல் நம்மால் வாழ முடியாது என்று சொல்லி நம் நிலங்களையும் நீர்நிலைகளையும் காடுகளையும் கடல்களையும் நம் மக்களையும் அழிக்கிறது இந்த நாகரிகம். எல்லாவற்றையும் ஏற்றுமதி செய் என்று தொடங்கிக் கூர்மையான அறிவு மிக்க இளைஞர்களையும் ஏற்றுமதிக்குரிய பொருட்களாகக் காண்கிறது இந்த நாகரிகம். நமக்கான கல்வியும் மருத்துவமும் வாழ்நெறியும் அரசியலும் பொருளியலும் மேற்கத்திய மயமாகிக் கொண்டிருக்கின்றன. இடையில் அரசியல்வாதிகள் தொடங்கி எத்தனையோ தரகர்கள். வழக்குரைஞர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் என்ற பெயரிலும் தரகர்கள்.

இந்தச் சூழலில் வைத்துத்தான் பெரியாரை நாம் கற்கவேண்டும். பெரியார் இறந்து 25 ஆண்டுகள் ஆகின்றன. எனினும் பெரியாருக்குள் இருக்கும் ஆற்றல்களை இன்றும் நாம் சேகரிக்க முடியும். அவர் தந்த வித்துக்களிலிருந்து நாம் விளைவு செய்து கொள்ளமுடியும். பெரியாரைக் கல்வி வணிகர்களிடம் ஒப்படைத்துப் பயனில்லை. துதிபாடிகளிடமிருந்து பெரியாரை விடுவித்தாக வேண்டும். பெரியாரை வைத்து இன்று பெரிய அளவில் வணிகம் நடப்பதை நாம் ஒப்புக் கொள்ளமுடியாது. சாதி எதிர்ப்பு மத எதிர்ப்பு பார்ப்பனிய எதிர்ப்பு என்பனவற்றிற்குள் பெரியாரைச் சிலர் முடக்கிவிட முனைந்திருக்கிறார்கள். பெரியாரின் சமதர்ம உணர்வுக்கு அழுத்தம் தர இவர்கள் மறுக்கிறார்கள். தமக்குள் உள்ள உடைமை வெறியை, நுகர்வு வெறியை, புகழ்வெறியை இவர்கள் மறைத்துக் கொள்கிறார்கள். பார்ப்பனியத்தை ஒழிப்பதற்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டே பார்ப்பனர்களிடமிருந்து பொய் உரைகளையும் தந்திரங்களையும் சதிச் செயல்களையும் இவர்கள் கற்றிருக்கிறார்கள். பெரியார் குறித்த மந்திரங்களை இவர்கள் ஓதுகிறார்கள். எத்தனையோ மூட நம்பிக்கைகளுக்கு இவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



இடம் கொடுத்திருக்கிறார்கள். பணமும் பதவியும் இவர்களுக்கு கடவுள்களாகியிருக்கின்றன. குட்டித் தலைவர்களுக்கு இவர்கள் காவடி எடுக்கின்றனர். சமதருமம் என்ற உணர்வை மையப்படுத்தி இவர்கள் வரலாற்றையோ வாழ்வையோ கற்பதில்லை. உயிர்களின் மீது உழவர்கள் மீது இவர்களுக்கு நேசம் இல்லை. இயற்கை வேளாண்மை குறித்து எண்ணம் இல்லை. மாற்று மருத்துவம் என்று இவர்கள் சிந்திப்பதில்லை. இயற்கையயும் வாழ்வையும் அழிக்கும் விஞ்ஞானத்தை இவர்கள் கொண்டாடுகிறார்கள். விஞ்ஞானம் வளர்த்து வைத்திருக்கும் மூட நம்பிக்கைகளுக்கு இவர்களும் உரியவர்கள். அறிவியலைக் கூட ஆழமாகக் கற்பதில்லை.

இவர்களுக்கு வரலாறு தெரியாது. மதம் தெரியாது. பெரியார் கற்பித்ததே போதும் என்றும் இவர்கள் சொல்லிக் கொள்வார்கள். குடும்பம் தேவையில்லை, கற்பு தேவையில்லை என்று பெரியார் சொல்லலாம். நீ எப்படி சொல்லலாம்? என்று கேட்பார்கள். இவர்களிடமிருந்துதான் நாம் பெரியாரை விடுவிக்கவேண்டும். சமதருமம் என்பதை மையப்படுத்திப் பெரியாரைக் கற்பதன் மூலம் தான் பெரியாரை நமக்குள் வளர்த்தெடுக்க முடியும். பிரிட்டிசாரின் சொத்துக்களை இழப்பீடின்றி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஈரோட்டுத் திட்டம் கூறுவதை நமக்குரிய ஆதாரமாக நாம் எடுத்துக் கொண்டால், ஏகாதிபத்திய எதிர்ப்பை முழு அளவில் பெரியாருக்குள் நாம் காண முடியும். சந்தைப் பொருளாதாரம் பெரியாருக்கு உடன்பாடாக இருக்க முடியாது. வல்லரசியத்தோடு கைகோர்த்துக் கொண்ட முதலாளிகளைப் பெரியார் ஒப்புக் கொள்ள முடியுமா? இயற்கை தொடர்ந்து நாசமாவதைப் பெரியார் ஒப்புக் கொள்வாரா? விஞ்ஞானததின் பெயரால் நிலங்களும் நீர்நிலைகளும் அழிக்கப்படுவதை பெரியார் ஏற்க முடியுமா? நுகர்வு வெறியைப் பெரியார் ஏற்பாரா? கல்வி என்ற பெயரில் கோடிக்கணக்கில் பணம் திரட்டுவதைப் பெரியார் ஏற்க முடியுமா? பெரியாரை விற்றுப் பிழைக்கும் வணிகர்களைப் பெரியார் ஏற்பாரா?

ஜமீன்தார்கள் மற்றும் லேவாதேவிகளை ஒழிக்க வேண்டு மென்றார் பெரியார். இன்றுள்ள அரசியல்வாதிகள் கோடி கோடியாய்க் கொள்ளையடித்து வைத்திருக்கிறார்கள். தமக்குக் குற்றேவல் செய்ய அடிமைகளை வைத்திருக்கிறார்கள்.

எங்கும் ஊழல்களை விதைத்து வளர்த்திருக்கிறார்கள். அதிகாரிகள் திட்டச் செலவில் ஒரு பகுதியைப் பங்கு கேட்கிறார்கள். இவற்றையெல்லாம் பெரியார் ஏற்க முடியாது. அரசு அதிகாரத்தில் பெரியார் அமர என்றைக்கும் விரும்பியதில்லை. அரசதிகாரத்தில் அமர்ந்தால் ஊழலுக்கும் உதிரிக் குணங்களுக்கும் வசப்பட்டே தீரவேண்டும். ஆகவே மக்கள் திரளோடு தான் பெரியார் இருக்க விரும்பினார். அரசு அதிகாரம் குறித்துப் பெரியார் அறியாதவர் இல்லை. மார்க்சியர் வரையறுத்துக் கூறுகிற முறையில் அரசு பற்றிய புரிதல் பெரியாருக்கு இல்லை என்கிறார்கள். பெரியார் கண்ட சமதருமம் விஞ்ஞான வகைப்பட்ட சோசலிசம் இல்லை என்றும் கூறுகிறார்கள். விஞ்ஞானம் என்ற அடைமொழி கொடுத்து விட்டதனாலேயே விஞ்ஞானம்

படிப்பகம்

www.padippakam.com



எந்தச் சூழலிலும் உண்மையைத் தான் சொல்லும், நல்லதைத் தான் சொல்லும் என்ற நம்பிக்கையில் இப்படிச் சொல்லுகிறார்கள். பெரியார் வற்புறுத்திய பகுத்தறிவு தேவையான அளவுக்கு மேலும் மேலும் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இவ்வகையில் பெரியாரியர் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் வரலாறு குறித்தோ பொருளியல் குறித்தோ பகுத்தறிவுப் பார்வையை வளர்த்துக் கொள்ளவில்லை. இன்று உயிரியல் என்றும் உளவியல் என்றும் மானுடவியல் என்றும் அமைப்பியல் என்றும் எத்தனையோ களங்களில் ஆய்வுகள் உலக அளவில் பெருகி வருகின்றன. இவற்றிலெல்லாம் பெரியாரியர் நுழைந்து செல்லவில்லை. கதைகள் புராணங்கள் காவியங்கள் இலக்கியங்கள் குறித்து எத்தனையோ ஆய்வுகள் நடைபெறுகின்றன. பெரியாரியர் இவற்றில் ஈடுபாடு கொள்ளவில்லை.

பெரியாரியத்தை வளர்தெடுக்க வேண்டிய கடமை இன்று பெரியாரியருக்கு இருக்கிறது என்பதைத்தான் நாம் அழுத்திச் சொல்கிறோம். இவர்கள் செய்யவில்லை என்பது பெரியாரின் குறையில்லை. பெரியாரிடையே அங்கங்கே தென்படும் அற்புதமான தெறிப்புக்கள் என்று நாம் பலவற்றைக் காண முடியும். இவை பெரியாரியத்தை வளர்தெடுப்பதற்கான வித்துக்கள். சாதாரண மக்களுக்குப் பெரியார் சில உண்மைகளைச் சொல்ல வேண்டியிருந்தது என்பதினாலேயே பெரியாரியத்தை வளர்க்காமல் இருந்து விட முடியாது. பெரியாரியம் குறித்த ஆய்வுக்கும் மார்க்சியம் பெருந்துணை செய்ய முடியும். மார்க்சியத்தைக் குறைபடுத்திய முதலாளியக் கூறுகள் பெரியாருக்குள்ளும் இருந்தன. வரலாற்றின் வழியே சமதருமம் என்பதை நுட்பமாகப் பயில்வதன் வழியாகத்தான் சமதருமத்தையும் சீரழித்த முதலாளியக் கூறுகளைக் கண்டு சமதருமத்தையும் சீரழித்த முதலாளியக் கூறுகளைக் அறிந்து களைய முடியும். சாதியும் மதமும் முதலாளியத்தோடும் இன்று பின்னிப் பிணைந்துள்ளன. தனித் தனியாய் இவற்றைக் களைவது சாத்தியமில்லை. மார்க்சியத்தையும் பெரியாரியத்தையும் எதிர் நிறுத்துவோர் முதலாளியத்திற்கே சேவை செய்பவர்கள். பெண் விடுதலை என்பது அதனளவில் தனித்துச் சாதிக்கக் கூடியதாகவும் இன்று இல்லை. பார்ப்பனியம் எங்கும் எதிலும் ஊடுருவியுள்ளது. நாம் கவனமாகத்தான் இங்கெல்லாம் பயணம் செய்யமுடியும்.

இறுதியாக இப்படிச் சொல்லலாம். பெரியார் குறித்து பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை. எல்லாவற்றையும் பெரியார் சொல்லியிருக்கிறார் என்று பெருமை பேசியும் பயனில்லை. இன்றைய உலகிற்குப் பெரியாரைக் கண்டறிந்து சொல்லவேண்டும். நமக்குள் செயல்படும் சக்தியாகப் பெரியாரை மாற்ற வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை மார்க்சியருக்கு முன்னோடி பெரியார்தாம் என்பதில் நமக்கு ஐயமில்லை. பெரியாரிடம் குறைகண்டு நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. சமதருமம் என்ற மையத்தில் பெரியாரைக் கண்டறிந்து ஆயிரம் கிளைகளில் பெரியாரை வளர்க்க முடியும். பெரியாரை ஆழமாகக் கற்றறிந்த பெரியவர்கள் இன்றும் இருக்கிறார்கள். இன்றைய உலகை எதிர்கொள்ள, மாற்றப் பெரியார் நமக்குத் தேவை.

படிப்பகம்

www.padippakam.com

13

# கன்னட எழுத்தாளர் லங்கேஷ் : வலிமை கொண்ட ஆளுமை

பாவண்ணன்

நவீன கன்னட இலக்கியத்தில் பெரும் பங்காற்றியவர்களில் ஒருவர் பி. லங்கேஷ். இவர் தொடாத துறை இல்லை. சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை ஆகிய எல்லாத் துறைகளிலும் தன் தடத்தை அழுத்தமாகப் பதித்தவர். அனைத்திற்கும் மேலாகக் கடந்த இருபதாண்டுகளாக லங்கேஷ் பத்திரிகை என்னும் வார இதழை வெற்றிகரமாக நடத்தி வருபவர்.

லங்கேஷ் பல வகையிலும் ஜெயகாந்தனை ஒத்தவராகக் கொள்ளலாம். நல்ல திரைப்படம் கன்னடத்தில் வரவேண்டும் என்கிற ஆவலில்தான் எந்த முன் அனுபவமும் இல்லாமலேயே பல்லவி என்கிற திரைப்படத்தை எழுதி இயக்கினார். அப்படம் அந்த ஆண்டில் குடியரசுத் தலைவர் விருது பெற்றது. ஒரு சில படங்களுக்குப்புறம் தொடர்ந்து அவரால் அத்துறையில் இருக்க முடியவில்லை. நவீன திரைப்படம் என்கிற கருத்தாக்கம் கன்னடத்தில் காலூன்றத் தொடங்கிய காலத்தில் அதற்காக உழைத்த முன்னோடிகளில் ஒருவராக லங்கேஷ் இருந்தார்.

சிமோகாவுக்கு அருகில் உள்ள கொனகவள்ளி என்கிற இடத்தில் 1935 ஆம் ஆண்டில் பிறந்த லங்கேஷ் முதுகலைப் படிப்பிற்குப் பின்னர் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகச் சிறிது காலம் பணியாற்றினார். சிறுகதை, நாவல், கவிதை, திரைக்கதை ஆகிய எல்லாத் துறைகளிலும் வல்லமையோடு செயலாற்றிக் கொண்டு வந்த சமயத்தில் ஆசிரியர்பணி இடையூறாக இருந்ததால் தனக்குப் பிடித்த பத்திரிகைப் பணியத் தேர்ந்தேடுத்துக் கொண்டு ஆசிரியர் வேலையைத் துறந்தார். லங்கேஷ் பத்திரிகை என்னும் பெயரிலேயே தன் வார இதழைத் தொடங்கினார். கல்லூரி ஆசிரியராக இருந்த காலத்திலேயே பிரஜாவாணி என்னும் கன்னட நாளிதழில் அவர் எழுத்துகளுக்கு ஒரு பெரும் வாசகர் கூட்டம் முதலில் இவ்வகையில்தான் உருவானது. எந்த அரசியல் கட்சியின் கொள்கையையும் தன் கொள்கையாக வரித்துக் கொள்ளாமல் தன் மனசாட்சிக்கு உகந்த விஷயங்களையே தன் படிப்பறிவு, பட்டறிவு ஆகியவற்றின் அடிப்படையில் உலகுக்குத் தொடர்ந்து சொல்லியும் எழுதியும் வந்தார். அரசியல் கட்டுரை எழுத்தாளர் என்கிற வகையில் இன்றும் கன்னட உலகம் விரும்பிப் படிக்கக்கூடிய ஒரு படைப்பாளியாக இவர் இருப்பதற்கு இது தான் காரணம்.

இன்றைய தேதியில் கர்நாடக அரசினைப் பற்றியும், அதன் ஊழல்கள் பற்றியும் துணிவோடு விமர்சனம் செய்யக் கூடிய ஒரே பத்திரிகை லங்கேஷ் பத்திரிகைதான். ஹெக்டே காலம், குண்டுராவ் காலம், பங்காரப்பா காலம், மொய்லி காலம், தேவே கௌடா காலம் ஆகிய எல்லாக் காலங்களிலும் நடந்த முறைகேடுகளை மக்களின்

படிப்பகம்

www.padippakam.com



மனசாட்சியாக நின்று தட்டிக் கேட்டு அம்பலப்படுத்திய பெருமை இப்பத்திரிகைகுண்டு. இப்பத்திரிகையின் இன்னொரு பெருமை கடந்த இருபதாண்டுகளில் இதுவரை தனிப்பட்ட அளவிலோ அரசாங்க அளவிலோ ஒரே ஒரு விளம்பரம் கூட வந்ததில்லை. முழுக்க முழுக்க வாசகர்களை நம்பி நடக்கிற ஒரே பத்திரிகை. மொத்தம் இருபது (பழைய சமநீதி அளவில்) பக்கங்கள் கொண்ட இப்பத்திரிகையில் ஆசிரியர் உரை, இலக்கியப் பகுதி, புத்தகத் திறனாய்வு, எழுத்தாளர் அறிமுகம், மொழிபெயர்ப்பு, அரசியல் கட்டுரை, கிண்டல் சித்திரங்கள், கேள்வி பதில், திரைப்படப் பகுதி எல்லாமே உண்டு.

தலித் இலக்கியப் படைப்பாளிகளுக்கும் முஸ்லிம் படைப்பாளிகளுக்கும் எழுதுதளமாக இப்பத்திரிகை இயங்கியது. இன்று உலகுக்குத் தெரிய வந்துள்ள எல்லாத் தலித் படைப்பாளிகளையும் முதலில் அடையாளம் கண்டு கொண்டதும் அவர்கள் படைப்புகளை வெளியிட்டதும் இப்பத்திரிகைதான். கன்னட இலக்கியத்தோடு பிரித்துப் பார்த்துப் பேச முடியாதபடி இந்த இதழ் உள்ளது. தீபாவளி மற்றும் புத்தாண்டு மலர்கள் இலக்கியக் கருவூலங்கள் என்று சொன்னால் மிகையில்லை. வாராவாரமும் லங்கேஷ் எழுதும் விமர்சனக் குறிப்புகள் மிகவும் முக்கியமானவை. ஒரு படைப்பாளி என்கிற வகையிலும் உலக நடப்புகளுக்கு அவருடைய எதிர்வினைகளை இப்பகுதி முன் வைக்கிறது. காவிரி பிரச்சனையின் போதும் தேவாலயங்களில் தமிழில் பைபிள் படிப்பதற்கு எதிர்ப்பு ஏற்பட்ட போதும் தமிழர்களுக்கு ஆதரவாக அவர் எழுதிய குறிப்புகள் மிகவும் முக்கியமானவை இருபதாண்டுகளாக அவர் எழுதிய இக்குறிப்புகள் இப்போது இரண்டு தொகுப்புகளாகத் தொகுக்கப்பட்டு (ஒவ்வொன்றும் அறுநூறு பக்கங்கள்) சமீபத்தில் வெளிவந்தன. இப்படிப்பட்ட செயல்பாட்டிற்கு இணையாகத் தமிழில் பாரதியைத் தவிர யாரையும் சொல்லத் தோன்றவில்லை. "புளிப்பு மாமரம்" என்கிற தலைப்பில் இவர் எழுதிய சுயசரிதை போன ஆண்டு வெளிவந்தது. மூன்று வார காலத்தில் எட்டாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன.

சிறுகதை ஆசிரியராக முதலில் அறிமுகமான பி.லங்கேஷின் முதல் தொகுதி 1963 ல் வந்தது. முதல் தொகுதியின் பெயர் "ஏரித் தண்ணீரை ஏரியிலேயே இறையுங்கள்" என்பதாகும். அதற்குப் பிறகு நான் அல்லன் உமாபதியின் "ஸ்காலர்ஷிப் யாத்திரை", "கல் கரையும் நேரம்" ஆகிய தொகுப்புகள் வெளிவந்தன. "கல் கரையும் நேரம்" தொகுப்புத்தான் 1994 ஆம் ஆண்டில் அவருக்கு சாகித்திய அகாதமியின் விருதைப் பெற்றுத் தந்தது.

இவை தவிர இரண்டு நாவல்களையும் ஒரு கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறார்.

பஸவண்ணரைப் பற்றித் தனக்கே உரிய பார்வையில் "சங்கராந்தி" என்னும் நாடகத்தை எழுதினார். நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் இன்றும்கூட நடத்தப்பட்டு வரும் நாடகங்களில் இதுவும் ஒன்றாகும்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஒரு சாதாரண எழுத்தாளர் எழுதிய "தர்ம காரணம்" என்னும் நாவல் வீர சைவ மடங்களின்

படிப்பகம்

www.padippakam.com



எதிர்ப்புக்குப் பணிந்து அரசால் தடை செய்யப்பட்ட போது படைப்பாளியின் சுதந்தரம் என்பதன் அடிப்படையில் அரசை எதிர்த்து மிகப்பெரிய ஊர்வலம் ஒன்றை நகருக்குள் நடத்தினார். அத்தோடு நிற்காமல் அரசை எதிர்த்து வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடுத்து வென்றார். தடை திரும்பப் பெறப்பட்டது. இத்தனைக்கும் அந்நாவல், கலைத் தரம் என்பதன் அடிப்படையில் தாழ்ந்ததுதான் எனினும் அதைத் தனியே விவாதிக்க வேண்டியது எழுத்தாளர் கூட்டமே தவிர தடை செய்யும் உரிமை அரசுக்கில்லை என ஆணித்தரமான மனவலிமையோடு எடுத்துரைத்தார்.

கன்னட இலக்கியவாதிகளுக்கு ஒரு விசேஷ குணம் உண்டு. அவர்கள் தம்மைப் பண்பாட்டின் தூண்களாக நினைத்துக் கொள்பவர்கள். அதற்காக உண்மையாகவே உழைக்கிறவர்கள். அவர்களுக்குக் கிடைக்கும் பெருமை அவ்வுழைப்பால் வருவதாகும். அவர்களுடைய ஆளுமையின் வளர்ச்சி என்பதும் அவர்களுடைய நடவடிக்கைகளால் அடையப் பெறுவதாகும். இலக்கியத்தை வாழ்விற்கு இணையாக நினைக்கும் மக்கள் இருப்பதால்தான் இலக்கியவாதிகளுக்கு கன்னட இலக்கிய உலகில் மற்ற எந்த மொழிகளிலும் இல்லாத அளவுக்குப் பெருமையும் புகழும் உள்ளது. அத்தகைய ஆளுமைகளில் ஒருவர் பி.லங்கேஷ்.

---

## தேவை தாய்த்தமிழ்ப் பள்ளி

தற்பொழுது நடைமுறையில் அரசுப் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் கற்பிக்கப் படுகிறது. 1,2,3 வகுப்புகளுக்கு முறையே 19 திறன்கள் தமிழுக்கும், 3 ஆம்வகுப்பில் தொடங்குகிற ஆங்கிலத்திற்கு 65 திறன்களும் உள்ளன. 5 ஆம் வகுப்பு முடிக்கும் மாணவனுக்குத் தமிழில் 95 திறன்களும், ஆங்கிலத்தில் 179 திறன்களும் வளர்க்கப் படுவதாக அரசுப் பாடத் திட்டத்தில் உள்ளது.

3 + 4 + - மழலையர்ப் பள்ளிகளில் ஆங்கிலத்திற்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. எழுத்து, பாட்டு, சொற்கள் ஆங்கில வழியிலேயே முதன்மைப் படுத்தப்படுகிறது. தமிழிலும் ஒரு பாடம் என்பது பயனற்றதே. வீட்டுச் சூழலில் தமிழும், பள்ளிச் சூழலில் ஆங்கிலமும் படிக்கும் மாணவர்களது நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போலத்தான் ஆகும். அதுவும் இளம் வயதில் ஏற்றப்படுகிற இத்தகைய கொடுமை அவர்களது எதிர் காலத்தில் வளமான சிந்தனைக்கு வழிகாட்டாது. 10 வயது வரை அதாவது 5 ஆம் வகுப்பு வரை தாய்மொழிவழிக் கல்வி என்பதே உளவியல் அடிப்படையில் சரியானதாக இருக்கும் 3 ஆம் வகுப்பிலேயே ஆங்கிலத்தை புகுத்துகிற இன்றைய கல்விமுறையில், மாற்றமில்லாது எப்படி தமிழ் வழிக் கல்வி என்பது சாத்தியமாகும்? ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக வைப்பது என்பதும், தமிழில் தொடக்கக் கல்வி என்பதும், "வாயடைக்கிற" செயலாகத்தான் தெரிகிறது. அதைவிடுத்து முறையான தியாகு அவர்களது "தமிழ் வழிக் கல்வித் திட்டம்" போல அரசு நடைமுறைப் படுத்துமானால் நாம் இச் செயலை மனமொப்பி ஏற்கலாம்.

– பொள்ளாச்சி நசன்
20.11.98

படிப்பகம்

www.padippakam.com

16

# தந்தை பெரியார் பார்வையில் திருக்குறள்

சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன்
வழக்குரைஞர், கோபி

புலவர் பெருமக்களிடம் பிறழ்ந்த பார்வையுடன் திகழ்ந்த திருக்குறளைப் பொது மக்களிடம் கொணர்ந்து சேர்த்தவர், அறிவாசான் தந்தை பெரியார் அவர்களே. பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு மூட நம்பிக்கைகளுக்கு இடமில்லாதவாறு திருக்குறளைப் பெரியார் விளக்கினார். சமுதாய நலத்திற்கு முதன்மை தந்து, அதனை அடையும் ஒரு திறம் மிகு கருவியாக திருக்குறளை அவர் பயன்படுத்தினார்.

திராவிடக் கழக நாளேட்டிலும் இதழ்களிலும் திருக்குறள் பற்றிய முறையான விளக்கங்கள் அவ்வப்போது தரப்பட்டன. ஒரு கால கட்டத்தில், திருக்குறளுக்காகவே தனி மாநாடுகளை நடத்தியும் உரைகளால் குறள் மேல் மெய்ப்பொருளை உணரும் வண்ணம் எழுதியும் பேசியும் பல்லாற்றானும் திருக்குறளைப் பரவ வகை செய்தது தந்தை பெரியார் அவர்களின் திராவிட இயக்கம்.

தமிழகத்தில் ஈராயிரம் ஆண்டுகளின் வரலாற்றை ஆராய்ந்தால் அறிவின் அடிப்படையில் அனைத்தையும் அணுகும் செயல் முறை திருவள்ளுவருக்குப் பிறகு பெரியார் அவர்களிடமே காணக் கிடைக்கிறது. இடைக் காலத்தில் மதமும் கருத்து முதல் வாதமுமே தமிழகத்தில் மேலோங்கி நின்றன.

மார்க்சியத்தில் சில மூலக் கோட்பாடுகளை தந்தை பெரியார் ஏற்றுக் கொண்டிருந்தாலும் "பொருளியற் புரட்சி"க்கு முன்னர் "சமுதாயப் புரட்சியே" தமிழகச் சூழலில் தேவையானது என்றும் 'பொதுவுடைமையினும்' 'பொதுவரிமை'யே தமிழக வரலாற்றின் காலக் கட்டாயம் என்றும் முடிவு கண்டார்.

திருக்குறளைப் போற்றுவதற்காகவோ, அல்லது திருவள்ளுவரைப் பெருமைப் படுத்துவதற்காகவோ, தந்தை பெரியார் அவர்கள் தமது சிந்தனைக் கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை. மாறாக முழுமையான "சமுதாய மாற்றத்துக்கு" வழிவகை செய்யக் கூடிய அறிவு நூல் திருக்குறள் என்பது அவர் தம் துணிந்த முடிவு.

தொடக்க காலத்தில் திருக்குறளைப் பற்றி தாம் தவறாகக் கருத்துக் கொண்டிருந்ததாகவும் மறைந்த திராவிட அறிஞர் மாணிக்கவேலு (நாயக்கர்) அவர்கள் முயற்சியால் தான் திருக்குறளை ஓதி உணர்ந்து ஆராய்ந்து தெளிந்ததாகவும் தந்தை பெரியார் அவர்கள் பல முறை குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் தமது பகுத்தறிவுக் கருத்துக்களுக்குப் பல ஆதாரங்கள் திருக்குறளில் இருப்பதாலும் தமிழ் மக்களைச் சமுதாயப்புலத்தில், முற்றிலும் மாற்றியமைக்கத் தக்க கருத்துக்களைக் குறள் கொண்டிருந்ததாலும், தமிழ் மக்கள் பின்பற்றக் கூடிய "முறை" ஏதாவது ஒன்று இருக்கிறது என்றால் அது திருக்குறள் தான் என்ற தன்மையுடன் திகழ்வதாலும் திருக்குறளுக்குத் தரப்பட்ட பொய்யுரைகளைத் தோலுரித்துக் காட்டி அதன் மெய்ப்பொருளைக் கண்டறிந்து பரப்புவதாகவும், பெரியார் அவர்களே பல இடங்களில் தெளிவாக விளக்குகிறார்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீட்டால் "திருக்குறளும் பெரியாரும்" (1983) என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. சென்னை மைலாப்பூரில் 14.3.1948ல் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மூன்றாவது திருவள்ளுவர்

படிப்பகம்

www.padippakam.com



மாநாட்டில் பெரியார் அவர்கள் ஆற்றிய உரையும்; 10.5.1949ல் பெரியாரால் எழுதப்பட்ட "திருக்குறளும் திராவிடர் கழகமும்" என்ற கட்டுரையும்; அக்கட்டுரையை ஒட்டி எழுதப்பட்ட "குடியரசுத் தலையங்கமும்; 1958ம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் முக்கூடலில் பெரியார் ஆற்றிய உரையும் அந்நூலில் இடம் பெற்றுள்ளன. அதனையே அடிப்படையாகக் கொண்டு அறிவாசானுடைய அரிய சில கருத்துக்களை மட்டும் அப்படியே இக்கட்டுரையில் தந்துள்ளேன். ஆங்காங்கே அந்நூலின் பக்கங்கள் இங்கு பிறையடைப்புகளில் தரப்பட்டுள்ளன.

தொடக்க காலத்தில் திருக்குறளில் தான் குற்றம் குறை காண்பதற்குக் காரணம் என்ன? என்பதை அறிவாசான் விளக்கும் போது

"நான் மற்ற ஆரிய புராண இதிகாசங்களில் சைவ வைணவங்களில் உள்ள குற்றம் குறைகளை எடுத்துக் கூறி வருவது போலக் குறளிலும் பல குற்றம் குறைகளைக் கூறி வந்துள்ளேன். காரணம், அப்போது நான் குறளுக்கு ஆரியரும் ஆரிய உணர்ச்சியுள்ள மதவாதிகளும் மற்றவர்களும் செய்த உரைகளை மெய்யென்று எண்ணியதேயாகும்" (38).

திருக்குறள் எந்த வகையினத்தைச் சார்ந்த நூல் என்பதைத் தமக்கே உரிய எளிய பாணியில் அவர் விளக்கும்போது "சுலபமாகக் கூற வேண்டுமென்றால் திருக்குறள் ஒரு பகுத்தறிவு நூல் (அதாவது மற்ற நூல்கள் சரியோ தவறோ நம்பிக்கை கொள்ள வேண்டிய நூல்கள்) (42)

ஒழுக்கம், நன்னடத்தை, நாகரிகம் என்பவையெல்லாம் மனிதரிடம் மனிதன் நடந்து கொள்வதையே அடிப்படையாகக் கொண்டது. அதற்கான நெறிகள் வழிகள் குறளில் காணலாம்" (42)

"குறளில் மக்களின் நல்வாழ்க்கைக்கும், நல்லாட்சிக்கும் மக்கள் பூரண மனிதத் தன்மை" அடைவதற்கும் ஏற்ற வழிவகைகள் குவிந்து கிடக்கின்றன. கேடுகள் ஒழிவதற்கும் வழிவகை குறளில் இருக்கின்றன" (52).

"எல்லாத் துறைகளைப் பற்றியும் நல்வழி காட்டக் கூடிய அறிவு வழியைக் காட்டக் கூடிய நீதி நூல், மக்களுக்கு இன்று குறள் ஒன்றைத் தவிர வேறில்லை. இதற்கு மேம்பட்ட ஒரு நீதி நூலை இன்று காண்பது அரிது (40) . . . நானோ என்னுடைய எல்லாக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் அவற்றிற்கான நெறிகளுக்கும் குறளையே ஆதாரமாக அடிப்படையாகக் கொள்பவன் அல்ல. ஆனால் எனக்கு குறள் ஒரு "அதாரிடியாக" விளங்குகிறது. என் கொள்கை, கருத்து ஆகியவைகளுக்கு திருக்குறளில் ஆதரவு இருக்கிறது . . . எங்களது கருத்துக்கு, கொள்கைக்கு குறள் ஆதாரமாக விளங்குகிறது . . . . குறள் ஏன் நான் இந்த முறையில் விளக்க வேண்டியிருக்கிறதென்றால் திருக்குறளிலுள்ள சில கருத்துக்கள் வேறு பலரால் உரை காணும்போது, எனக்குப் பின்பற்ற முடியாததாக இருந்தாலும் இருக்கலாம். அதனை வைத்து இவன் குறளின்படி நடப்பதில்லை என்று சில புலவர்கள் என்னைக் குறை கூறி மக்களை எளிதில் ஏமாற்றிவிட முடியும்" (40-41)

இவ்வகையில் திருக்குறளைப் பகுத்தறிவுடன் ஆராயும் அறிவாசான் பெரியார் அவர்கள், குறட் கருத்துக்கள் தனக்கு ஏலாதவை என்று எங்குமே குறிப்பிடவில்லை. மாறாக அதில் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய எல்லாமே உள்ளன என்ற கருத்தைத்தான் அவர் ஏற்கவில்லை.

"திருக்குறளையே முடிந்த முடிவென்றோ அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களோ எல்லாக் காலத்திற்கும் பொருந்துமென்றோ, மதவாதிகள் வேதத்திற்குச் சொல்வது

படிப்பகம்

www.padippakam.com



போல் நான் கூறவில்லை. இன்றைய கருத்துக்கேற்ப சில மாற்றங்கள் திருக்குறளில் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கலாம். திருக்குறள் ஆரிய கருத்துக்கு நேர் மாறானது; மனுதர்மத்துக்கு நேர் மாறானது; திராவிடர்களுக்குப் பெரிதும் ஏற்றது என்று மட்டும் நான் உறுதியாகக் கூறுவேன்" (22)

திருக்குறள் ஏன், எதற்காக, எப்படி எழுதப்பட்டது என்பதைப் பற்றிக் கூறும் போது தந்தை பெரியார் அவர்கள், தேனீக் குடிக்கீரனார் எழுதிய சாற்றுகவி ஒன்றை மேற்கோளாகக் கூறி விளக்குகிறார்.

பொய்ப்பால் பொய்யேயாய்ப் போயின பொய்அல்லாத
மெய்ப்பால் மெய்யான் விளங்கினவே – முப்பாலில்
தெய்வத் திருவள்ளுவ செப்பிய குறளால்
வையத்து வாழ்வார் மனத்து

இதன் பொருளைக் கூறும்போது, "இந்தப் பாட்டின் பொருளாவது, திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் எந்தெந்தப் பொய்க் கருத்துக்கள் மெய் என்று பரப்பப்பட்டனவோ அவைகளின் வண்டவாளம் விளங்கும்படியும். எந்தெந்த மெய்க்கருத்துக்கள் பொய்யாகக் கருதப்பட்டிருந்தனவோ அவையெல்லாம் மெய்யெனத் தெரியும்படியும் திருக்குறளில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அதாவது திருக்குறளில் பொய்மெய்யாகவோ அல்லது மெய்பொய்யாகவோ கூறப்பட்டிருக்கவில்லை" என்கிறார் (27).

திருக்குறள் சமயமற்ற அறிவு நூல் – வாழ்க்கை நூல் என்பதையும் "திருக்குறள் நம் நெறி" என்பதையும் எடுத்துக் காட்டும் போது, மதம் என்ற வார்த்தையில் எனக்கு வெறுப்பு ஒன்றும் கிடையாது. "மதம்" என்றதும் அதில் கூறப்படும் நெறிகள் மறைந்து விடுகின்றனவே என்பது தான் என்னுடைய கவலை. அதற்காகத் தான் "நெறி" என்று கூறுகிறேன். மதம் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொடுக்கக் கூடிய மார்க்கம் சாதனம் என்கின்ற கருத்தில் தான் மதத்தை மக்கள் மதிக்க வேண்டும். ஆகவே தான் ஒழுக்கத்தைக் கவனிக்க முடியாததும், வெறும் வேடத்தை மாத்திரம் கொண்டதும் அறிவுக்குப் பொருந்தாததுமான மதம் எதுவானாலும் அந்த மதங்கள் மீது எனக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது.

திருக்குறளில் ஒரு கருத்து கூறப்பட்டிருக்கிறது என்று கூறினால் போதும் அதுவே உண்மை என்று ஒப்புக் கொள்ளலாம். அதில் யாவருக்கும் எந்தக் காரியத்திற்கும் பொருந்தக் கூடிய கொள்கைகள் பல இருக்கின்றன. அதில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை நாம் பொது நெறியாகக் கொள்வது அவசியம். (திருக்குறளைப்) பொது நெறி என்று ஏன் கூற வேண்டும்? மதம் என்று ஏன் கூறக் கூடாது? என்று நீங்கள் கேட்கலாம். மதம் என்று கூறினால் மதத்திலுள்ள நெறியெல்லாம் மாய்ந்து அதிலுள்ள பூச்சாண்டிப் பழக்க வழக்கங்கள் தான் மிஞ்சுகின்றன என்று தெளிவுபடுத்துகிறார் (24 - 25)

"நமக்கு வேண்டிய முழு அறிவையும் கொடுக்கக் கூடியதாக ஒரு நூல் வேண்டுமானால் அது திருக்குறள் தான் என்பதை நீங்கள் தெளிவாக உணருங்கள். உணர்வது மட்டுமல்ல நன்றாக மனத்தில் பதிய வையுங்கள்" (18).

"திருவள்ளுவர் நூல் ஒன்றே போதும் இந்நாட்டு மக்களுக்கு எல்லாம் அறிவை உண்டாக்க" (26).

"திருக்குறளின் ஒவ்வொரு கருத்தும் ஒருவன் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாக இருக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும், ஒவ்வொரு

படிப்பகம்

www.padippakam.com



துறையும் அதில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது" (27).

திருக்குறளில் கடவுளும் கருத்து முதல் வாதமும் இல்லை யென்பதை பெரியார் அவர்கள் தெளிவாக நிலை நாட்டுகிறார்.

திருக்குறளுக்குள் கடவுள், மதம், சாதி, வர்ணம், மோட்சம், முன்ஜென்மம் என்பனவற்றை மத அடிப்படையில் விளக்கும் சொற்களோ கருத்துக்களோ இல்லை உறுதியாகக் கூறுகிறேன். குறள் என்ற நூலில் கடவுள் என்ற சொல்லோ, கடவுள் என்ற ஒரு வஸ்துத் தன்மையோ, அறவேயில்லை. கடவுளே இல்லையானால் மற்றவற்றை (கருத்து முதல் வாதக் கோட்பாடுகளை) எப்படி அதில் காண முடியும் (43). சில நற்பண்பு கொண்ட உயர்ந்த மகனை வழிபடுக என்று தான் (திருவள்ளுவர்) கூறியிருக்கின்றார். வழிபடு என்றால் பின்பற்றி நட என்பது தானே பொருள் (45).

"கடவுள் என்பது வஸ்துருபமாக அதாவது ஒரு பண்டமாக வந்த பின்னர் தான் அதன் தன்மை இன்றுள்ள மோசமானநிலைக்குச் சென்றுவிட்டது. அதாவது கடவுளும் மனிதனைப் போல் கூடாவொழுக்கங்களுடன் காட்சியளிக்க வேண்டியதாயிற்று. சாணி உருண்டையும் குழவிக் கல்லும் குரங்கும், கழுகும், பாம்பும், அரச மரமும் மனிதரில் சில இழி மக்களும் கடவுளர்களாகக் கற்பிக்கப்பட்டதால் எந்த உயர்ந்த தத்துவங்களும், நீதி நெறிகளும், ஒழுக்கமும், கடவுள் தன்மையாகக் கொண்டு வரப்பட்டனவோ அவையெல்லாம் பாழ்படுத்தப்பட்டன. (47). . . . கடவுள் மன்னிப்புத்தானே மனிதனை அயோக்கியனாக்குகிறது. காரணம் என்ன? கடவுள் என்ற உருவத்தை நம்பி வாழ்வதாலேயே அதற்குப் பூசைக் காசு தந்து பரிகாரம் செய்து கொள்ள இயலுகிறது. கடவுள் என்பது உருவமல்ல, தனி வஸ்து அல்ல என்று கொண்டு, உயர்ந்த பண்புகளை கடவுளாகக் கடவுள் தன்மையாகக் கொண்டிருந்தால் இப்படி இருக்க முடியாது. கடவுள் அருளுக்குப் பண்புகளே அவசியமில்லாமல் பூசை - பிரார்த்தனை - படையல் - காசுகளே அவசியமாக்கப் பட்டதால் அது (கடவுள் அருள்) மனித சமுதாயத்திற்குப் பயன்படாமல் போயிற்று.

வள்ளுவர் வகுத்த குறளில் கடவுளுக்குப் பூசை செய், பிரார்த்தனை செய், அடிமையாயிரு! என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால் இன்னென்ன பண்புகளுக்கு ஆளாகி இன்னென்ன பண்புகளைப் பின்பற்று என்றே அறிவூட்டியிருக்கிறார். அதை நாம் மறந்ததாலேயே மனித சமுதாயத்திற்குப் பாதுகாப்பும் ஒழுக்கமும் இல்லாமல் போய்விட்டது. (48-49). . . . (எனவே கடவுள் வாழ்த்தில் வரும் சொற்றொடர்கள்) பண்புகளை குணநலன்களைக் காட்டுவதாகும் ஒரு மனிதனுக்கு என்னென்ன குணநலன்கள் இருக்க வேண்டுமோ அந்தப் பண்புடையவனைத் தான் திருவள்ளுவர் அதன் மூலம் குறிப்பிடுகிறார் குணமும் உருவமும் ஆதியும் அந்தமும் இல்லாத கடவுள் என்பவருக்கு அறி ஆதி, குணம். உருவம் கற்பிப்பது (உரையாசிரியர்) என்பது அறியாமையும் மூடநம்பிக்கையுமாகும் (89).

"நான் அச்சுப் போட்டு விற்று திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்று போடாமல் பண்புச் சிறப்பு என்று தான் போட்டிருக்கிறேன்" (86) என்று தெளிவாக்குகிறார்.

"திருக்குறள் ஆசிரியருக்குக் கடவுளைப் பற்றிக் கூட நம்பிக்கை யில்லை. ஒரு கடவுள் இருந்தால் அது இப்படி இருக்க வேண்டும், இல்லையானால் அது ஒழிய வேண்டும் என்று தான் அவர் கூறியுள்ளார்"

"கடவுள் இல்லையென்று நினைத்துக் கொண்டு காரியத்தை ஒழுங்காக

படிப்பகம்

www.padippakam.com



நடத்தி வருவது குற்றமாகாது என்றுதான் அவர் கூறியிருப்பதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது'.

"இருப்பதாக நினைத்தால் அது உன்னைக் காப்பாற்றுவதாய் இருக்கட்டும் என்றுதான் இவர் கூறியிருப்பதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்

என்று கூறியுள்ளார்."

"இன்றைய தொழிலாளர்களின் பட்டினிக்கு முதலாளிகள் காரணம் என்றால் அம்முதலாளியை ஒழிக்கப்பாடுபடுவது நல்ல பயன் அளிக்காது அவனைக் காப்பாற்றி பாதுகாப்பு அளித்து வரும் கடவுளை முதலில் ஒழி, கடவுள் கெடட்டும் என்று தான் அவர் கூறியுள்ளார். ஆலாப் பறக்கட்டும்" அப்படிப்பட்ட கடவுள் என்று தான் கூறியுள்ளார். (30 - 31)

தொழிலாளி தனது பட்டினிக்கு சொத்தைக் காரணமாக நினைப்பதில்லை. கடவுள் தான் அவனை அப்படிப் பாடுபட்டும் பட்டினி கிடக்கும்படி உற்பத்தி செய்து விட்டார் என்று நினைக்கிறான் (32).

எதனையும் பகுத்தறிவின் துணை கொண்டே ஆராய்ந்து முடிவு செய்க என்ற பொருள் முதல் வாதத்தின் அடிப்படைக் கருத்துத் திருக்குறளில் யாங்கும் மிளிர்கிறது என்பதைப் பெரியார் அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்.

மற்ற ஆதாரங்கள், பழக்க வழக்கங்கள் என்பவைகள் எப்படி யிருந்தாலும் சரி, உன் அறிவைப் பயன்படுத்திக் கொள்! எந்தக் காரியத்தையும் அனுபவ அறிவின்படி ஆராய்ந்து பார்! முன்னாள் பழக்க வழக்கங்கள், பெரியவர்கள் மனிதத் தன்மைக்கு மேற்பட்டவர்கள் சொன்னது நீண்ட நாளாக இருந்து வருவது என்பதற்காக எதையும் எடுத்துக் கொள்ளாதே என்பதாகும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு - 6, 8 என்றும்

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு - என்றும் குறிப்பிடுகிறார்.

வள்ளுவர் அறிவியல்வாதி என்பதற்கு பெரும் எடுத்துக் காட்டுகள் பல இடங்களிலும் இருக்கிறது (83)

தலைவிதியையும் கடவுளின் சர்வ சக்தியையும் குறள் மறுக்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டே மிக மிகப் போதுமான தென்போம். அது என்னவெனில்,

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகு இயற்றியான்

இதில் இரண்டு உண்மைகள் இருக்கின்றன.

1. ஒரு மனிதன் இரந்து பிச்சை எடுத்துக் கொண்டு உயிர் வாழ்வதற்குக் காரணம் அவன் தலைவிதி அல்ல என்பது

2. உலகத்தைச் சிருஷ்டித்தது அதாவது உலகில் உள்ள நலத்துக்கும் கேட்டிற்கும் இன்பத்துக்கும், துன்பத்திற்கும் கடவுள் காரணமல்ல, கடவுள் சக்தி ஆக்கல்

படிப்பகம்

www.padippakam.com



இவற்றிற்குப் பொறுப்பல்ல என்பது (58-59)

"தெய்வம் எத்தனம் என்பது பயனற்றது, மனித எத்தனம் தான் உண்மை என்பதற்குப் எடுத்துக்காட்டு குறளில் இருக்கிறது" (60).

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

எல்லாக் காரியங்களும் தெய்வத்தால் தான் ஆகிறது என்று சொல்லப்பட்டாலும், உண்மை நடப்பு என்னவென்றால், மனிதனது முயற்சியும் செய்கையும் இருந்தால் தான் பயன் உண்டாகும் என்கிறது (61).

திருவள்ளுவர் ஒரு சிறந்த கூட்டுடைமைவாதி என்பதையும் திருக்குறள் ஏற்றத் தாழ்வற்ற பொதுமைக் குமுகாயத்தை அமைக்கும் முதல் நூல் என்பதையும் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார்.

"வள்ளுவர் அந்தக் காலத்தில் வாழ்ந்த ஒரு சமதர்ம வாதியாவார் என்று கூடக் கூறலாம். ஏனென்றால் பொதுவுடைமையின் அடிப்படையை நாம் குறளில் காண முடிகிறது" (52).

குறளுக்கீடான பொதுவுடைமை சமதர்மக் கருத்து, வேறு எந்தத் தமிழ் நூலில் எங்கிருக்கிறது? (52)

குறளில், மக்களின் நல்வாழ்க்கைக்கும், நல்லாட்சிக்கும் மக்கள் பூரண மனிதத் தன்மையடைவதற்கும் ஏற்ற வழிவகைகள் குவிந்து கிடக்கின்றன. உலகக் கேடுகள் ஒழிவதற்கும் வழிவகை குறளில் இருக்கின்றன (52).

அறம், பொருள், இன்பம் பற்றி பெரியார் தனது கருத்தைத் தெளிவாக்கும் போது திருக்குறள் கருத்துக்களை வெகு ஆழமாகவும் எளிமையாகவும் எடுத்தியம்புகிறார்.

அறம் என்பது மனிதனிடம் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய மனிதனின் ஒழுங்குமுறை – கடமை பொருள் மனித வாழ்க்கைச் சாதனம் இன்பம் என்பது மனிதன் அனுபவிக்கும் நற்பேறு (47) திருவள்ளுவர் நூல் ஒன்றே போதும் இந்நாட்டு மக்களுக்கு எல்லாம் அறிவை உண்டாக்க (26)

திருக்குறளை மட்டுமே எடுத்துக்கொண்டு அதிலுள்ள எல்லாத் தலைப்புகளின் கீழ் வருவனவற்றை இரண்டு மூன்று பிரிவுகளாக அதாவது படித்த மாத்திரத்தில் எளிதில் பொருள் விளங்குவனவற்றைக் கீழ் வகுப்புகளுக்கும், சற்று கடினமாக குறள்களை நடுத்தர வகுப்புக்கும் மிகுந்த புதைபொருள் கொண்டு கூட்டிப்பொருள் காண வேண்டியவற்றை மேல்வகுப்புக்கும் வைத்தால் பள்ளிகளில் மதப்படிப்போ ஒழுக்கப்படிப்போ தனியாக வைக்க வேண்டிய அவசியமே இராது (26)

திருக்குறள் ஒன்றே போதும், உனக்கு அறிவு உண்டாக்க; ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொடுக்க; உலக ஞானம் மேற்பட. அப்படிப்பட்ட குறளைத் தான் நாம் இது வரை அலட்சியப்படுத்தி வந்திருக்கிறோம்.

ஆதலால் தான் குறளைப் படியுங்கள், ஆரிய நீதி நூல்களை கோட்பாடுகளை அறவே விலக்குங்கள் என்று வற்புறுத்திக் கூறுகிறேன். நான் இன்றைய பேரறிஞர்களைக் கேட்டுக் கொள்வதென்னவெனில் இடைக் காலத்தில் வாழ்ந்த சில புலவர்களால் குறளில் கற்பிக்கப்பட்டுள்ள கற்பனைகளை – மாறுபாடுகளை நீக்க நீங்கள் முன்வர வேண்டும் என்பது தான் (53)

படிப்பகம்

www.padippakam.com



# அழிய விடுவோமா தமிழை

**சேதுபதி**

அன்றாட வாழ்வில் நாம் ஆங்கிலத்துக்குக் கொடுக்கும் அதிக முக்கியத்துவம் ஆபத்தானது. எழுத்துத் தமிழ் ஒரு புறமிருக்க, மொழியின் உயிர்நிலை ஆகிய உச்சரிப்பு அன்றாட வாழ்வின் அவசரங்களாலும் நெருக்கடிகளாலும் சிதைக்கப்படுகிறது; நீண்ட தொடர்கள் குறுகுகின்றன. சிதைவுறும் சொற்களின் வேர்த்தன்மை அடையாளமற்று நொறுக்கப் படுகிறது. மாநில எல்லைப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் உச்சரிப்பு நிலைகளில் அண்டை மாநிலத் தாக்கங்களும், மாநிலம் முழுக்க ஆங்கிலச் சொற்களின் மிகு கலப்பும் மலிந்து வருகின்றன. பிற மாநில மொழிகளில் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களின் விகிதாச்சாரம், தமிழ் மொழியிலுள்ள ஆங்கிலச் சொற்கலவையின் விகிதாச்சாரத்திற்கும் குறைவாக உள்ளது. அன்றாடம் பயன்பாட்டிலுள்ள தமிழ்ச் சொற்களைக் கவனித்து எண்ணினால் நூற்றுக்கும் குறுகும் நிலை வளர்கிறது. காலப் போக்கில் ஆரியம் போலவே வழக்கொழியும் அபாயம் எழுகிறது!

தொடரும் மொழிக் கலப்பில் மரபுச் சொற்களும், பெரியோர் சிறியோர்கட்கிடையிலான மரியாதைச் சொற்களும், குடும்ப உறவுகளை உணர்த்தும் உறவுச் சொற்களும் ஒழிந்து வருகின்றன. அம்மாவின் இன்னொரு பெயரான "ஆத்தா" இல்லை. அம்மாவின் அம்மாவைக் குறிக்கும் அம்மம்மா, அம்மணி, அம்மாச்சி, ஆச்சி, ஆயா, அவர்கட்கும் மூத்தோரைக் குறிக்கும் பாட்டி, அப்பாவின் அம்மாவைக் குறிக்கும் அப்பத்தாள் (அப்பா+ஆத்தாள்) ஆகியவற்றையும், Grand Molther என்னும் ஒற்றைச் சொல் விழுங்கி விட்டது. அவ்வாறே, அப்பா எனும் சொல்லின் பிற வடிவங்களாகிய அப்பச்சி, அய்யா, அத்தா முதலியனவும்!

இவற்றுள் கொடுமை யாதெனில், சித்தப்பாவும், மாமாவும் ஆங்கிலத்தில் ஒருவராகவே Uncle என்று அறியப்படுகிறார்கள்! அவ்வாறே சித்தியும், மாமியும் Aunty ஆகிறார்கள்! நடக்க மாட்டாதவன் போய்ச் சித்தப்பன் வீட்டில் பெண் எடுத்ததாய்க் கூறும் கேலிப் பழமொழியை உண்மையாக்கும் விபரீதம் இது! எத்தனை பழமொழிகளும், துணைக் கதைகளும், விடுகதைகளும் வழக்கொழிந்து போயிருக்கின்றன சமீப காலமாய் . . .!

குப்பைகளை அகற்றி வீட்டைத் தூய்மைப்படுத்துதலை, பெருக்குதல் என்றும், கூட்டுதல் என்றும் கூறுதல் தமிழ மரபு! ஆனால் செய்வதென்னவோ குப்பைகளைக் கழித்தல் தான்! கழிவுகளை

படிப்பகம்

www.padippakam.com



ஒதுக்கினால் தூய்மை பெருகும் சுகாதாரம் கூடும் எனும் உட்பொருள்கள் தொனிக்கும் இச் சொற்களை மொத்தமாய்க் க்ளீன் (Clean) பண்ணிவிட்டது ஆங்கில மொழிக் கலப்பு!

இவ்வாறு பைந்தமிழ்ச் சொற்கள் பலவற்றைக் கொன்று அவ்விடத்தே ஆங்கிலச் சொற்களை நிரப்பி இணைக்கப் பன்னிப் பன்னிப் பேசுதல் வழக்காகி விட்டது.

அன்றாட அலுவல்கள், இதரப் பணிகள் இவையெல்லாம் அழிந்து நட்புடனும், உறவுடனும் பேசக் கிடைக்கும் நேரம் மிகவும் குறுகி வருகிறது. அவ்வாறு பேசும் பொழுதிலும் தமிழில் உரையாடுவது பாமரத்தனமாகக் கருதப்படுகிறது. தப்பித் தவறித் தமிழ் பேசுபவர்களின் மீது இளக்காரப் பார்வை வீசப்படுகிறது. ஆங்கிலம் பேசுவோரிடையே சின்னப் பிழை நேர்ந்தாலும் முகஞ் சுளித்தல், உடனே திருத்தும் அக்கறை இவற்றில் நூற்றில் ஒரு பங்கு கூடத் தமிழ் ஒலிப்பில் இல்லை! காரணங் கேட்டால் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சிக்கு ஒலிப்பதிவு நாடாக்கள், சிறப்பு வகுப்புகள், பயிற்சி முறைகள் பல உண்டு. தமிழுக்கு என்ன உண்டு எனும் கேள்வி. . .!

பணிகட்கிடையே எஞ்சிய கொஞ்சப் பொழுதையும் தன்வசம் இழுத்துப் பறிக்கும் தொலைக்காட்சி நிகழ்வுகளும், போட்டி போட்டுக் கொண்டு மொழிச்சிதைவு செய்கின்றன! நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் உச்சரிப்பு மிகக் கொடுமை! அவற்றை, அவர்களின் பாவனைகளை அப்படியே உள்வாங்கி அதன் பிரதிகளாய் உரையாடுகிறார்கள் தமிழர்கள்! இயல்பான குடும்ப உரையாடல்களை அறுத்து, கணவன்-மனைவி, தந்தை-மகன், தாய்-மகள், நண்பர்கள் போன்றோரிடையே நாடகத்தனமான உரையாடல்களைத் திணித்திருக்கின்றன இத்தகு நிகழ்ச்சிகள்! சாதாரணமாய்ச் சொல்ல வேண்டிய ஒரு செய்தியைக் கூட அறிவிப்பு நிலைக்குக் குரலை உயர்த்திக் குறிலை நெடிலாக்கி நெடிலைக் குறிலாக்கி, குறைத்தலும், நீட்டி முழங்கலும் புது மரபாகி வருகிறது!

குறில் நெடில் அனைத்தையும் தாண்டி; "அளபெடை" தமிழில் அதிகமாகி வருகிறது. தனியார் தொலைக் காட்சிச் செய்திகளில் கேட்டுக்கொண்டார் "கலந்து கொண்டார்" எனக் கூறப்படும் சொற்களின் இறுதி நெடில்கள், அளபெடுத்துக் "கொண்டாஅர்" என ஒலிக்கப் படுகின்றன.

நிகழ்ச்சித் தாக்கங்களெல்லாம் போய் விளம்பரத் தாக்கங்களில் காட்சிப் பொருள்களாகி வருகிறார்கள் மக்கள்! அவர்களின் உச்சரிப்பில் எல்லா லகரங்களும் பொது எகரமாகி வருகின்றன. அதீத மொழியுணர்வில் இயல், இசை, நாடகம் எனச் செந்தமிழ் முத்தமிழாக விளங்குகிறது

படிப்பகம்

www.padippakam.com



அவர்கட்கு எல்லா லகரங்களும், சிறப்பு ழகரங்களே! ரகர, றகர வேறுபாடு எழுத்திலும், பேச்சிலும் அருகிப் போயிற்று. தமிழ் "ன"கரங்கள் மூன்றிருப்பதே பேசும் பலருக்குத் தெரியாது!

இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தும் பொறுப்பு யாருக்கு உண்டு? தமிழறிஞர்களின், மொழியியலாளர்களின் கேள்விகளுக்கெல்லாம், "மக்களுக்குப் புரியும் படியாக மக்கள் தமிழில் பேசத்தானே முடியும்" எனப் பதில்!

முன்பெல்லாம் தமிழ் இலக்கியங்களையும், பண்பாட்டுப் பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புக்களையும் அன்றாட வாழ்க்கையோடு இணைத்துப் பட்டி மண்டபங்களாகவும், வழக்காடு மன்றங்களாகவும், பொதுத் தமிழை மக்கள் தமிழ் ஆக்கி வந்திருந்தார் தவத்திரு. குன்றக்குடி அடிகளார்! சமயப் பொழிவைத் தமிழ் இலக்கியப் பிழிவாக வழங்கினார் திருமுருக கிருபானந்த வாரியார்! அவர்களுக்குப் பின்னால் மெல்லத் தேய்ந்து அருகும் நிலைக்கு வந்து விட்டது மேடைத் தமிழ்! சின்னத் திரையும், பெரிய திரையும் போட்டி போட்டுக் கொண்டு பெரிதும் விழுங்கி விட்டன அதையும்! இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாது "குலுக்கல் லாட்டரிச் சீட்டுகளாகி வருகின்றன தமிழ்ப் பத்திரிக்கைகள்!

எச்சமின்றி முழுதும் விழுங்கப்படும் நிலையில் தமிழ் ஆகி வருவது குறித்துக் குரல் எழுப்புபவர்களும் குறைந்து வருகிறார்கள்! மொழியைப் புலவர்கட்கு என்றாக்கி விட்டார்கள். அவர்களும் வகுப்பறைகட்குள் "பாடமாக்கி" வைக்க அதனால் பலனேதும் இல்லையெனப் புறக்கணித்து விட்டுப் பிறமொழிகளின்பால் கவரப்பட்டுப் போயினர் மக்கள்! மூன்றாந் தலைமுறையினர், இம்மொழி குறித்த எந்தச் சிறப்பையும், தேவையையும் அறியாது வளர்கிறார்கள்! எழுத, பேச, வாழ அவர்களுக்கு ஆங்கிலமே தேவை எனும் சூழல்! மதிப்பெண் பெற்றுத்தர மனப்பாடம் பண்ணி எழுதினாலே போதும் எனும் அளவுக்குக் குறுகிக் கிடக்கிறது தமிழ்!

"மெல்லத் தமிழினிச் சாகும்" என்று கூறியவர்களைப் "பேதை" என்று பாரதி போல் புறக்கணிக்க முடியாநிலை!

ஆரியத்தையும், இந்தியையும் எதிர்த்துத் தமிழைத் தூக்கிப் பிடித்த அரசியல் கட்சிகளும் ஆங்கில மோகத்தை எதிர்க்க யோசிக்கின்றன; தமிழ் மொழி பேணுவோரின் பெருவிருப்பை நிறைவேற்றுவாற் போன்று தமிழ் வளர்ச்சிக் கென்று தனித் துறை அமைத்த தமிழக அரசு, மேற்கொண்டு அது குறித்துத் தீவிர அக்கறை காட்டத் தயங்குகிறது!

படிப்பகம்

www.padippakam.com



# புதிய தமிழ் இலக்கியங்கள்

## தூர்வை - நாவல்

சோ. தர்மன்

கடந்த 40 ஆண்டுகளில் தமிழக விவசாயச் சமூகம் சந்தித்த துயரங்களைக் கூறும் நாவல் தூர்வை. பசுமைப்புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் விவசாயம் எப்படி இருந்தது என்பதை நாவலின் முன்பகுதி சொல்கிறது. கால்நடைகளோடு, உறவினர்களோடு விளைந்ததைப் பகிர்ந்து மகிழ்ச்சியுடன் இருந்த விதத்தை விவரிக்கிறது. தமிழ்நாட்டின் இயற்கை வளம் எப்படி இருந்தது. பசுமைப் புரட்சிக்குப் பின்னர் விவசாயிகளின் நிலை என்னவாயிற்று என்பதை நாவலின் பின்பகுதி விவரிக்கிறது.

விவசாயிகள் மட்டுமல்லாது கைவினைஞர்களும் நகர்மய மாக்கலில் மாட்டிக் கொண்டு எவ்வாறு சீரழிகின்றனர்? அவர்களது தன்மானம் எப்படிச் சிதைக்கப்படுகிறது? கிராம சமூகம் முன்பு எப்படித் தன்னைத் தானே நிர்வகித்துக் கொண்டது? வேளாண்மைச் சமூகம் விருந்தோம்பலில் சிறந்து விளங்கியது எப்படி? அது தனது வயிற்றுப் பாட்டிற்கே வழியற்று எப்படிப் பஞ்சம் பிழைக்க நகர்ந்தது? உரக் கடைகளும், இரசாயன நஞ்சுக் கடைகளும், மனிதர்களுக்கான ஆங்கில மருத்துவர்களும், மருந்துக் கடைகளும் பெருகிய வரலாறு என விரிந்து செல்கிறது நாவலின் தளம்.

கோயில்பட்டி, விருதுநகர், சிவகாசி, திருநெல்வேலி வட்டார மக்களின் வாழ்நிலையை அவர்களின் மொழி நடை சற்றும் மாறாமல் கதாபாத்திரங்களாக்கி உலவ விட்டிருக்கிறார் தர்மன். ஏராளமான நாட்டுப் புறக் கதைகள், திருவிழா பற்றிய விவரணைகள், கிராமத்து மனிதர்களின் நகைச்சுவை உணர்வுகள் என எல்லாவற்றையும் மண்ணின் மணம் மாறாமல் பதிய வைத்துள்ளார்.

மினுத்தானும், மாடத்தியும் தமிழ்நாட்டின் பண்பாட்டுக்கு நல்ல எடுத்துக்காட்டு. விருந்தோம்பலிலும், அன்பு காட்டுவதிலும் சிறந்தவர்கள். தன் கண்ணெதிரிலேயே வாழ்க்கை கை நழுவிப் போவதை வேதனையுடன் பார்க்கிறான் மினுத்தான். மழை குறைகிறது மாடுகள் இல்லாமல் போகின்றன. டிராக்டர் வருகிறது. எருவுக்குப் பதில் இராசயன உரங்கள், பொன் விளைந்த கரிசல் நிலங்களில் வெடித்தொழிற்சாலைகளும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் வருகின்றன. தனது நிலம் கற்பழிக்கப்படுவதாக மினுத்தான் உணர்கிறான்.

மினுத்தானின் மகன் பெரிய சோலை. இவன் சிறுவனாக இருக்கும் போதுதான் பசுமைப்புரட்சிக் காலம் தொடங்குகிறது. வாலிபனாகப் பெரியசோலை ஆனபோது கிராமத்தில் எதுவுமே மிஞ்சியிருக்கவில்லை. இயற்கையோடும், கால்நடைகளோடும், நிலத்தோடும் இரண்டறக் கலந்த பண்பாட்டு வாழ்வு படிப்படியாகச் சிதைகிறது. பெரிய சோலைக்குத் தெரிந்திருந்த கிராமத்து வளமான வாழ்வு பற்றிப் பெரிய சோலையின் மகன்களுக்கு எதுவும் தெரியாது. அவர்கள் நகர வாழ்வின் இயந்திரத் தனத்திற்குள் சிக்கி விடுகின்றனர். நகரத்தின் அருவருக்கத்தக்க சமூக

படிப்பகம்

www.padippakam.com



உறவுகளைத் தர்மன், நாவலின் இறுதிப் பகுதியில் காட்டுகிறார். ஒரு சமூகத்தின் பண்பாட்டு அழிவைப் பதிவு செய்திருக்கும் நாவல் தூர்வை.

நாவலைப் படித்து முடித்த போது நமக்குள் பசுமைப் புரட்சியின் பின்னாலுள்ள அரசியல் பற்றி உணர்கிறோம். முதலாளியப் பெருக்கத்திற்கும், நகர் மயமாதலுக்கும் இடம் கொடுப்பதன் மூலம் நமது சமூகத்தை அழிய விடக் கூடாது. கிராம சமூகம் தனது அடிப்படைகளை மீட்டமைக்க முதலாளியத்துக்கெதிராகப் போர் தொடுப்பதைத் தவிர வழியில்லை. இத்தகைய உணர்வை நமக்குள் ஏற்படுத்தியுள்ளார் தர்மன்.

## அழிவின் தத்துவம்

### விடுதலைக்கு இலக்கணம் கூறும் நூல்

நவீன அறிவியல் தொழில்நுட்பம் கூறும் "வளர்ச்சி" பற்றிய கூச்சலைக் கேள்விக்குள்ளாக்குகிறார், நாகராசன். எது வளர்ச்சி? யாருக்கான வளர்ச்சி? என்று கேட்கிறார். அறிவியல் தொழில் நுட்பம் எனும் பெயரால் மேலைநாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் மீது செலுத்தும் ஆணவத்துடன் கூடிய அதிகாரத்திற்கெதிராகப் போர்க் குரல் கொடுகிறார் நாகராசன். இந்தியாவில் விஞ்ஞானிகள் என்று தம்மைக் கருதிக் கொள்ளும் சிலரின் முகமூடியைக் கிழித்தெறிந்து அவர்களை மக்கள் முன் அடையாளம் காட்டுகிறார்.

சமூக விடுதலையில் உள்ள பல்வேறு தடைகளை இவர் இந்த நூலில் உடைக்கும் விதம் அற்புதமானது. மனிதன் என்பவன் யார்? என்பதிலிருந்துதான் இவரது ஆய்வு தொடங்குகிறது. மனிதனுக்குள் வரலாற்றுக் காலம் தொடங்கி ஏற்பட்ட மாற்றங்கள், கனவும், கற்பனையும் மனித வரலாற்றில் வகிக்கும் பாத்திரம் என எல்லாவற்றையும் முழுமையானதொரு பார்வையிலிருந்து இவர் விளக்கும் போது நமது ஆற்றல் பற்றிப் பெருமிதம் ஏற்படுகிறது. ஏசு, புத்தர், அல்லா, மார்க்சு போன்றோர் மக்களின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றமைக்கு இவர் கூறும் காரணங்களும் மக்கள் விடுதலையில் நாகராசனின் கோணம் முற்றிலும் புதியது என்பதைக் காட்டுகின்றன. இவர்தம் சிந்தனைகள் மனித சமூகத்தின் ஒட்டுமொத்த ஆற்றலையும் உயர்த்தும் திறன் வாய்ந்தவை.

ஆற்றலை வெளிக் கொணரும் வகையிலான இவருடைய மெய்யியல் ஆய்வு முறை மார்க்சியர் என்று தம்மைக் கருதிக் கொள்ளும் கட்சியனரின் பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. வெறுப்பையும், கோபத்தையும் அடிப்படையாகக் கொண்ட விடுதலையில் நாகராசனின் கோணம் முற்றிலும் புதியது என்பது புரிகிறது. இவரது சிந்தனைகள் மனித சமூகத்தின் ஒட்டுமொத்த ஆற்றலையும் உயர்த்தும் திறன் வாய்ந்தவை.

மனிதனின் ஆற்றலை வெளிக் கொணரும் வகையிலான இவருடைய மெய்யியல் ஆய்வுமுறை மார்க்சியர் என்று தம்மைக் கருதிக் கொள்ளும் கட்சியினரின் பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. வெறுப்பையும், கோபத்தையும் அடிப்படையாகக் கொண்ட விடுதலை நோக்கம் என்றும் நிலையானதன்று. விடுதலை பிரிக்க முடியாதது. ஆதிக்கம் வகிக்கும் மனிதனுக்கும் சேர்த்துப் பெறப்படுவது தான் விடுதலை. ஆதிக்கம் செய்யும்

படிப்பகம்

www.padippakam.com



மனிதனைக் கோபத்துடன் பார்ப்பதை விடப் பரிதாபத்துடன் நோக்குவதே சிறந்தது என்கிறார்.

மேற்கத்திய பண்பாடு இயந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது இயந்திரத்தைப் போற்றும் மேற்கத்தியர்கள் காற்று, மழை, பனி இவற்றைத் தமக்குத் தீங்கு செய்பவைகளாக நோக்குகின்றனர். இயற்கையை வென்று அடக்குவதே வளர்ச்சி எனக் கருதுகின்றனர். இத்தகைய பண்பாட்டின் உச்சந்தான் ஏகாதிபத்திய நாசிசம் இதற்குரிய தத்துவ அடிப்படை கிறித்தவ-யூத சமயங்களில் உள்ளது. கடவுளால் வாக்களிக்கப்பட்ட மக்கள் இவர்கள். இவர்கள் தமது நலனுக்கென இயற்கையை அழிக்கலாம். பிற மக்களை ஒடுக்கலாம். இத்தகைய பண்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக கிழக்கத்தியப் பண்பாட்டைக் குறிப்பிடுகிறார். இங்கு இயற்கை செழித்துள்ளது இவர்கள் வேளாண்மையைப் போற்றுகின்றனர். இயற்கையோடு இணைந்து தம் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டுள்ளனர். பருவம் கண்டு பயிர் செய்கின்றனர். கிழக்கத்திய மக்களின் பொருளுற்பத்தியில் இயற்கையின் பங்குதான் அதிகம். மனிதர்களின் பங்கு மிகவும் குறைவு. ஏகாதிபத்தியமோ, முதலாளியமோ, கொடூரநெறி அரசுகளே இங்குத் தோன்றாமைக்கு இவைகளே அடிப்படை என்கிறார்.

நாகராசன் உயிரியல் ஆராய்ச்சியாளர். இவரது மார்க்சிய அறிவும், உயிரியல் ஆய்வும் ஒன்றை ஒன்று நிறைவு செய்பவை. வலுவுள்ளவையே வாழும் எனும் டார்வினியக் கோட்பாட்டை விமர்சனத்துக்கு உட்படுத்துகிறார். பரிணாமக் கோட்பாட்டை ஏற்கும் அதே நேரத்தில் இயற்கைத் தேர்வு என்பதை நாம் நிராகரிக்க வேண்டும் என்கிறார். அதற்குரிய காரணத்தையும் சொல்கிறார். வலுவுள்ளவையே வாழும் என்பதை நாம் ஏற்றால் முதலாளியத்திற்கு என்றுமே அழிவில்லை, அழிக்க முடியாது என்று நாம் சொல்ல வேண்டி வரும் சாமானிய மக்களுக்கும், ஒடுக்கப்படுவோருக்கும் விடுதலை இல்லை என்றாகும் என்கிறார்.

"பகை முரண்பாட்டுக்கு அழுத்தம் தருவது ஆணியம். நட்பு முரண்பாட்டுக்கு அழுத்தம் தருவது பெண்ணியம். பாட்டாளி வர்க்கம் தன் விடுதலையைச் சாதித்துக் கொள்ள வேண்டுமானால், முதலாளி வர்க்கத்திற்கும் சேர்த்து விடுதலையைச் சாதிக்க வேண்டும், என்ற மார்க்சின் கூற்றில் காண்பது பெண்ணியம். இறுதியில் ஆணியம் அழிவுக்குத்தான் வழி வகுக்கும். பெண்ணியம்தான் உலகைக் காப்பாற்றும். மேற்கத்திய மார்க்சியம் என்பது ஆணியம். மாவோவின் மார்க்சியம் அதன் சாரத்தில் பெண்ணியம்" இவ்வாறு சொல்லும் நாகராசனின் மெய்யியல் தேடல் மார்க்சியத்தின் ஆற்றலை மேலும் வளர்க்கிறது. இவரது சிந்தனையின் வழியே விடுதலையின் வெளிச்சத்தினை நாம் உணர்கிறோம்.

நவீன அறிவியல் தொழில் நுட்பம் இயற்கை ஆதாரங்களின் மீது சுமத்தும் வரம்பற்ற சுமைகள் உலகில் மனிதனின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அழிவின் தத்துவம் நூல் மக்கள் விடுதலையில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் படித்துத் தெளிய வேண்டிய அரிய நூல்.

குறிப்பு : நிகழ் முகவரியில் இந்த நூலைப் பதிவு அஞ்சலில் பெற ரூ. 50/- அனுப்புங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# தென்பாண்டித் தமிழரின் சிலம்ப வரலாறும் அடிமுறைகளும்

சிலம்பு ஒரு தற்காப்புக் கலையாகும். சுமார் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் கம்பு அடிமுறை, நடசாரி, தென்கன் களரி போன்றவைகளை உட்பிரிவாகக் கொண்டு தற்காப்புக் கலையாகச் சிலம்பம் விளங்கியது. அகத்தியர் கம்ப சூத்திரத்தில் 18 அடவுகள் உண்டு என விளக்கம் தருகிறார்.

அடவுக்குப்பின் சுவடு என்ற வகையில் தெக்கன் சுவடு, வடக்கன் சுவடு, பொன்னுச் சுவடு, தேங்காய்ச் சுவடு, ஒத்தைச் சுவடு, கருப்பட்டிச் சுவடு, முக்கோணச் சுவடு, வட்டச் சுவடு, மிச்சைச் சுவடு, சர்ச்சைச் சுவடு எனச் சுவடுகள் விரிவாகச் செல்கின்றன.

சிலம்பத்தில் வர்ம அடிமுறை 20 வகையினதாகும். உடற்கூறு சாஸ்திரம் நன்கு தெரிந்தவர்தாம் - 4449 நாடி நரம்புகளை நன்கு தெரிந்தவரல்லாமல் வேறு யாரும் வர்ம அடியைப் பயன்படுத்த முடியாது என்று கூறப்பட்டு வந்தது. ஆனால், பொதுவாக வர்மங்கள் நூற்றி எட்டு என்ற சொல் வழக்கு வழங்கப்பட்டு வருகிறது. படுவர்மம் 12 தொடு வர்மம் 96 என்று குமரி மாவட்டத்தார் கூறுவார்கள். நமது உடலில் 72,000 நாடி நரம்புள்ளதாக இந்நூல் நவில்கிறது. வர்ம அடியை, பிடியை, தற்காப்புக்கு மட்டுமே பயன்படுத்தக் குரு அருள் ஆணையுண்டு. உடல் உறுப்பு, சிலம்படி, உடன் பயில்வோர் - எதிரி என வரும் போது சிலம்பால் ஏற்படும் உபாதை நீக்க வர்மக் கலையிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உடலமைப்பில் உள்ள வர்மங்களைக் காண, சிலம்பாட்டம் பயில, வரைபடமாக மிகமிக நேர்த்தியாகப் பயிலும் முறையில் 704 படங்கள் போடப்பட்டுள்ளன. மிகச் சிறப்பாக உள்ளது. மேலும், "வாதம்போம், வாயுபோம், கபம்போம், துலங்குபசி உண்டாகும்" என உடல்நலம் பெற உறுபகையை வெல்லச் சிலம்பப் பயிற்சியின் அவசியத்தைக் கூறுகிறது.

1. அகத்தியர் கம்பு சூத்திரம், 2. வர்மக் கலை 3. நெடுங்கம்பு 4. குறுந்தடி 5. சிலம்பத்தில் ஆயுதப் பெருக்கம் 6. நடசாரி 7. இன்றைய சிலம்புப் போட்டி என ஏழு வகையினவான நூல் விளக்கங்கள் மிகச் சிறப்பாக அமையப் பெற்றுள்ளன.

கர்னல் வெல்ஸ் - "எனது இராணுவ நினைவுகள்" என்ற நூல் குறிப்பிலிருந்து தனக்குச் சின்ன மருது ஈட்டி எறியவும், வளரி வீசவும், கற்றுத் தந்ததையும், 300 அடிக்கு அப்பால் நின்று வளரி வீசி வெல்லும் ஆற்றலை வியக்கும் விதமும் குறிப்பிடப்பட்டு நம் போர்ப் பயிற்சியின் மேன்மையைப் பறை சாட்டுகிறது.

பேழ்வாய்ப் புலியைப் பெரிய மருது வாலைப் பிடித்து இருகையாலும் சுற்றி, இருபதடி தூரம் இழுத்துச் சென்று கவண் போல் சுற்றித், தரையில் அடித்து - அதன் பல்லைப் பிடுங்கி மார்பில் கட்டு ஆற்றல் பெரிய மருதுவிடம் இருந்ததையும், இராமகிருஷ்ணப் பிள்ளை, ஆங்கிலேய ஆட்சித் தலைவர் முன், வாள்வீசி மூடிய பானைக்குள் நீரில் மிதந்த எலுமிச்சம் பழத்தைச் சரி பாதியாக வெட்டி, பாதிப்பழம் நீரிலும், மீதிப்பழம் நிலத்திலும்

படிப்பகம்

www.padippakam.com



விழச் செய்த விந்தையைக் கண்டு, இத்தகைய வீரர்களை விட்டுவைத்தால் வெள்ளையர் ஆட்சிக்கு ஆபத்தென்றெண்ணி வெல்ஸ் துரை வீரர்களை ஏவினான். கைது செய்ய வந்த வீரர்களைக் கைத்தடியால் வர்மத்தில் அடித்து வீழ்த்தினார் என்று வீர விளையாட்டுப் பற்றி எழுதும் இடம் 13ம் நெஞ்சை நிமிர வைக்கிறது.

சாந்துணையும் கற்கக் கூடியது ஏட்டுக் கல்வி முடியாதது. உடல் தளர்ந்தால் ஏலாதது உடற்கல்வி. ஆக முதன்மையாகக் கற்க வேண்டியது நம்மை, நாட்டைக் காக்கும் கல்வியை, தென்பாண்டித் தமிழரின் வீர விளையாட்டை, அடிமுறையை, வர்மக்கலை உடற் கூற்றுச் சாஸ்திரத்தை. இத்தகைய மறைந்து போன கலைகளை வெளிக் கொணர அனைவரும் முயலவேண்டும் நான் பெற்ற ஓவியக் கலையறிவு சிலம்பாட்டக் கலையறிவு தமிழிலக்கிய நூலறிவு இம் மூன்றின் சேர்க்கையால் இந் நூலை உருவாக்கினேன். சுருங்கச் சொன்னால் "கலை நூலை நான் உருவாக்கவில்லை கலைகளே என்னை உருவாக்கின" என்பதே உண்மை என நூலாசிரியர் அருணாசலம் கூறுகிறார். இன்றைய சூழலில் பல அருணாசலங்கள் தேவை. தொலைந்துபோன, மறந்துபோன, எரிந்துபோன கலை நூல்களை மீட்டெடுக்க.

– புலவர் கி.ஆ. குப்புராசு

நூல் பெயர் : தென்பாண்டித் தமிழரின் சிலம்ப வரலாறும் அடிமுறைகளும்
ஆசிரியர் : அ. அருணாசலம்
வெளியீடு : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம்
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை - 2.
பக்கங்கள் : 270 விலை : ரூ. 120/-

## பாவண்ணனின் அடுக்கு மாளிகை

1993 லிருந்து 1997 வரை வெளியான 11 சிறுகதைகளும் ஒரு நெடுங்கதையும் இத்தொகுப்பிலுள்ளன. எல்லா கதைகளும் மனிதநேயம், இயற்கை, பெண்களுக்கு எதிராக வக்கிரங்கள் பற்றிப் பேசுகின்றன. நியாய அநியாயங்கள் செத்துப்போன எதையும் வியாபாரமாக்கும் பழமையான மரபுகளை உடைத்து அழிக்கும், நவீன உலகம் மனிதனை அன்புக்கு ஏங்கச் செய்கிறது. கையாலாகாதவனாக்குகிறது. அடையாளமற்ற மனிதன் சாதிச் சங்கங்களில் தன் அடையாளத்தைத் தேடுகிறான். அவனறியாமல் மதம், மொழி சார்ந்த விசயங்களில் ஈடுபட்டு வன்முறையாளனாகிறான். இத்தகைய சூழலையும் சூழலில் வாழும் மனிதர்களையுமே ஆசிரியர் கதைப் பொருள் ஆக்கி இருக்கிறார்.

"ஆறு", "மூர்க்கம்" இரண்டு கதைகளும் காவிரி நதி நீர்ப் பிரச்சனையில் கன்னட வெறியர்கள் தமிழர்கள் மீது நடத்திய வெறியாட்டத்தைப் பேசுகின்றன. எல்லாக் கலவரங்களிலும் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். பொருட்கள் சூறையாடப்படுகின்றன. எல்லார்க்கும் பொதுவான ஆற்றை ஒரு இனம் மட்டும் சொந்தம் கொண்டாடுவதால் எழுந்த வெறி, மற்றொரு இனத்தை பலி கேட்கிறது. இயற்கையை மனிதன் விருப்பம் போல் அடக்கியாள நினைக்கிறான். இயற்கையை நேசிக்கத் தெரியாத மனிதனிடம் அது தன் கோபத்தைக் காட்டுகிறது. ஆற்றை தெய்வமாக, ஜக்கம்மாவாக பாவிக்கும் பண்டாரம் "ஆத்தா (ஆறு) தடையைத்

படிப்பகம்

www.padippakam.com



தூண்டி வரப்போறா" என்று குறி சொன்னதால் ஆற்றின் குறுக்கே அணைகட்டும் அதிகார வர்க்கத்தின் கைகளில் அழிபடுகிறார். அதிகாரம் தனக்கு எதிரான குரல்களை சப்தமிழக்கச் செய்கிறது "குறி" கதையில்.

"கிணறு" கதையில் அரசனின் மகளை கீழ்ச்சாதிக்காரனான மாரப்பன் சிறையெடுத்து போக, ஊர் அடைக்கலம் தருகிறது. அரசு அதிகாரம் தன் படை வலிமை கொண்டு மாரப்பனை கிணறு வெட்டும் தண்டனை கொடுத்துக் கொல்கிறது. அன்பை வெளிக்காட்டு வீரனான மாரப்பனையும் அந்த அன்பை நிலை நிறுத்த முயலும் ஊரையும் அரசு நாசப்படுத்துகிறது.

வியாபாரமயமான இன்றைய உலகத்தின் இடுக்குகளில் சிக்கிய மனிதன் வாழ்க்கைக்காக எல்லா தந்திரங்களையும் கைக் கொள்கிறான். ஆனாலும் மனிதன் இன்னும் அடிப்படையில் நல்லவனாகவே இருக்கிறான். இவரது கதைகள் அதிகமும் அந்த நல்ல குணத்தை அடையாளப் படுத்துபவனாகவே அமைந்துள்ளன. ராஜண்ணா மற்றவர்களுக்கு எல்லா கெட்ட பழக்கங்களையும் அறிமுகம் செய்தாலும் ஒரு கொலைக்கான தண்டனையை தான் மட்டும் ஏற்றுக் கொள்ளும் நல்லவனாக இருக்கிறான்.

எல்லா உறவுகளும் சுமுகமாக அமைவதில்லை. அவசியமான நேரத்தில் உதவுகின்ற உறவுகளை அது தரும் தொந்தரவுகளோடும், இடைஞ்சலோடும் நேசிக்க வேண்டுமென்பதை "வாகனம்" கதை பேசுகிறது. "கனல்" என்ற நெடுங்கதை தன் கூட்டாளி செய்த கொலைக்காக தான் தண்டனை அனுபவிக்கும் ஒருவன் பழிவாங்க வேண்டும் என்ற கோபத்தை காப்பாற்றி வருகிறான். அவன் திருடனாக இருந்தாலும் கொலைவெறியோடு வாழ்ந்தாலும், குழந்தையை நேசிக்கும் இதயமும், மற்றவர்களின் துன்பங்களை பகிரும் மனிதநேயமும் உள்ள அவனால் தன் கூட்டாளியைக் கண்டபோதும் கொல்ல முடியவில்லை. இது குழந்தைகளுக்கான உலகம். பெரியவர்கள் தங்கள் மூர்க்கத்தை விடவேண்டும்.

எந்தவொரு கலையும் அன்பைத் தூண்டுவதாக அமைய வேண்டும். வியாபாரமாக்கக் கூடாது. தன் சுயநலத்துக்காகப் பயன்படுத்தக்கூடாது என்ற மரபான நம்பிக்கை கொண்ட சிலம்பாட்டக்காரர் ராமையாவை கட்சிச் சண்டை சாதிச் சண்டையாக பரிணமிக்கும் சூழல் கொலைகாரனாக மாற்றுகிறது. இன்றைய இழிவான உலகம் "முடிவு" கதையில்.

தாயன்பு மற்ற உறவுகளால் சமப்படுத்த முடியாதது. அம்மா கூறிய விக்ரமாதித்தியன் கதைகளில் வேண்டுமானால் பதுமைகள் வேண்டியதைத் தரலாம். யதார்த்ததில் அன்பு வற்றிய இந்த உலகம் வாழத் தகுதியற்றது. அம்மாவின் அன்புமயமான உலகத்திற்கு ஏங்கும் குழந்தையின் உள்ளம் "அடுக்கு மாளிகை" கதையில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

பாவண்ணன் கதைகளுக்கு அன்பே உள்ளடக்கமாகிறது. அதிகாரம் சாதி அமைப்புகள், அன்பை அழிக்கக் கூடாது; இலக்கியம் அன்பைத் தூண்டவேண்டும். பழி வாங்கக்கூடாது. இயற்கைக்கு எதிராக மனிதன் செயல்படும் போது அது தன் வலிமையை மனிதனுக்கு எதிராகப் பயன்படுத்தும் என்ற கருத்தாக்கத்தையே பாவண்ணன் கதைகளாக்குகிறார்.

— உமா

"அடுக்கு மாளிகை"
ஆசிரியர் : பாவண்ணன் பக்கம் : 168 பக்கங்கள் வெளியீடு : காவ்யா

படிப்பகம்

www.padippakam.com

31

# கோவையில் தமிழியக்கங்கள்

தமிழக முதிர்ந்த சிந்தனையாளர் பேரவையின் சார்பில் கணபதி ரூபி ஆங்கிலப் பள்ளியில் நவம்பர் 15ல் நடைபெற்ற கூட்டத்தில் கவிஞர் சிற்பி ஆற்றிய பேருரை தினமணியில் வெளிவந்து தமிழகத்தில் ஒரு புயலை கிளப்பியது. ஏ.ஜி. கனகரத்னா அவர்கள் எழுதிய, ஆங்கிலப் பேராசிரியர் ஒருவரது நூல் குறித்த ஒரு சிறு கட்டுரை "ஆங்கிலம் வெற்றிவாகை சூடிய வரலாறு" இந்தக் கட்டுரையைச் சிறுநூலாகப் பேராசிரியர் இரா. இளவரசு முன்பே வெளியிட்டுள்ளார். இதன் மறு பதிப்புத்தான் முதிர்ந்த சிந்தனையாளர் இப்பொழுது வெளியிட்டுள்ள சிறுநூல்.

இங்கிலாந்தில் இலத்தீனும், கிரேக்க மொழியும் பெற்றிருந்த ஆதிக்கத்திற்கெதிராகப் போராடி ஆங்கிலம் வெற்றிவாகை சூடிய வரலாற்றை இந்தச் சிறுநூல் எடுத்துரைக்கிறது. அன்று ஆங்கிலம் இருந்த இடத்தில் இன்று தமிழ் இருக்கிறது. ஆங்கிலத்திற்கெதிராகத் தமிழ் போராட வேண்டி இருக்கிறது. நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சியும் தொழிற் புரட்சியும் இங்கிலாந்தில் ஆங்கிலம் வெற்றி பெறுவதற்கான காரணங்களாக இருந்தன. இவற்றோடு மதச் சீர்திருத்த இயக்கமும் மக்களின் மொழிப்பற்றும் காரணங்கள். இந்தியாவில் தமிழகத்தில் ஆங்கிலம் வெற்றி பெற்ற வரலாறும் நமக்குத் தேவை. சந்தைப் பொருளாதரத்தை எல்லோரும் தாங்கும் நிலையில் கள்ளி மரங்கள் என கல்வி வணிகர்களை வளர்த்துவிட்ட நிலையில் இந்திக்கு எதிரான கேடயம் என ஆங்கிலத்தை அரசு கைப்பிடித்த நிலையில் தமிழ் எப்படி வெற்றி வாகைச் சூடும்?

இந்தக் கருத்தரங்கில் சில சுவையான, சூடான விவாதங்கள் இடம் பெற்றன. இராமன் விழாவுக்கு எதிராக இராவணனுக்கு விழா தேவை. விளம்பரப் பலகைகளில் தமிழ் இடம் பெறுவதில் தயக்கம் கூடாது. இப்படிச் சில கடமைகளை நிறைவேற்ற தமிழ் இளைஞர்படை தேவை என்றார் பேராசிரியர் இராமாத்தாள். இராவணன், பார்ப்பனனாக இருக்க முடியும் காவியத்திற்குள் கவிதையை/இலக்கியத்தைக் காண வேண்டுமே ஒழிய வரலாற்றை வரையறுக்க முடியாது என்றார் கவிஞர் சிற்பி. தனித் தமிழில்தான் அறிவியலை கற்பிக்க வேண்டுமென்றால் அறிவியல் பெருகி வரும் இன்றையச் சூழல் தமிழுக்கு அறிவியல் என்றுமே வந்து சேராது என்றும் அவர் கூறினார். மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்பிக்க வேண்டுமென்று அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அரங்கில் கூறிய பொழுது மூன்றாம் வகுப்பிலிருந்து என்ன மயிருக்கு ஆங்கிலம் கற்பிக்க வேண்டும். முதல் வகுப்பிலிருந்தே தொடங்கி விடுவதுதானே என்று தான் ஆவேசமாகக் கூறியதைப் புலவர் ஆதி நினைவு கூர்ந்தார்.

ஆரியருக்கும், திராவிடருக்கும் நடைபெற்ற போராட்ட வரலாற்றைத் தான் இராமாயணம் சொல்லுகிறது என்று பேராசிரியர் இளமாறன் எடுத்துரைத்தார். திராவிட இயக்கம் தமிழை அழிக்கிறது என்ற சிற்பியின் கருத்தை மறுக்கும் முறையில் தமிழை என்றைக்கும் எவராலும் அழிக்க முடியாதென்றார் கனல் மைந்தன். தமிழை வளர்ப்பதில் அரசை நம்பியிருக்க முடியாது. திருவள்ளுவர், பாரதி, பாரதிதாசன் ஆகியவர் கவிதைகளை மாணவர் நெஞ்சில் பதிய வைக்கும் முறையில் தமிழ் அமைப்புக்கள் செயல்பட வேண்டும். தாய்த் தமிழ்ப் பள்ளிகளைத்

படிப்பகம்

www.padippakam.com



தோற்றுவிப்பதன் மூலமே இனி தமிழை வளர்க்க முடியுமென்றார் ஞானி.

பெரியவர் திசு. அவிநாசிலிங்கம் அவர்கள் நினைவை கொண்டாடும் முறையில் கோவையில் தமிழுணர்வு கருத்தரங்கு நவம்பர் 21ல் நடைபெற்றது. காந்தி கிராமப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திசு. அவிநாசிலிங்கம் அவர்கள் தமிழுக்காற்றிய பணிகளை நினைவு கூர்ந்தார். தமிழைப் பயிற்சி மொழியாக்கினார். திருக்குறளைக் கல்வித் திட்டத்தில் சேர்த்தார். இந்தியாவிலேயே முதல் முறையாகத் தமிழில் கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்கு ஆவண செய்தார். இவை தவிர கோவை மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக இராமகிருஷ்ணா வித்யாலயத்தையும் மனையியல் பல்கலைக்கழகத்தையும் அவிநாசிலிங்கம் அவர்கள் தோற்றுவித்தார். துணைவேந்தர் இன்று தமிழுக்கு நேர்ந்துள்ள நெருக்கடி குறித்தும் ஆவேசமாகப் பேசினார்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமையில் தமிழுணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. கோவில் வழிபாட்டிற்கு தமிழ் தகுதி உடைய மொழி அன்று என்பதை மறுக்கும் முறையில் அடிகளாரும் புலவர் மருதவாணன் அவர்களும் உரையாற்றினர். அறிவியலை ஆங்கிலத்தில் கற்பிக்க வேண்டுமென்ற தமிழக அரசின் ஆணையை கடிந்துரைத்தார் ஞானி மெக்காலேவை கல்வியமைச்சர் பாராட்டியதைக் கடிந்துரைத்த பேராசிரியர் மரா.போ. குருசாமி அவர்கள் இன்றைய சூழலைக் குறிப்பிட்டு தமிழின் தலைவிதி என்று முடித்தார். இந்தக் கருத்தரங்கின் போது தமிழன்னல் என்ற விருது 23 தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டது. விழாவை ஏற்பாடு செய்தவர்கள் திரு. இராமசாமி (செட்டியார்) புலவர் மு. சுப்ரமணியம்.

சமக்கிருதம் தான் தெய்வமொழி வழிபாட்டுக்கு தமிழ் தகுதியுடைய மொழி அன்று. இவ்வாறு உயர் நீதி மன்றத்தில் பார்ப்பனர் தொடுத்த வழக்கு தமிழ்நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. எதிர்வழக்குத் தொடர்ந்திருக்கிற தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தமிழ் சைவ அமைப்புக்களையும், தமிழ் அமைப்புக்களையும் ஒன்று திரட்டும் முறையில் நவம்பர் 7ல் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அன்று செய்த முடிவின்படி நவம்பர் 28 அன்று கோவையிலுள்ள தமிழ்நாடு உணவகத்திற்கெதிரில் உண்ணாநோன்பு நடைபெற்றது. சுமார் 400 பேர் கலந்து கொண்டனர். சைவ அமைப்புக்கள், தமிழ் அமைப்புக்கள் என கோவைக்கு வெளியில் இருந்து ஈரோடு, பல்லடம், காங்கேயம், பொள்ளாச்சி முதலிய ஊர்களிலிருந்து பலர் வந்திருந்தனர்.

நாள் முழுவதும் ஆவேசமான உரைகள் நடைபெற்றன. தமிழின் தெய்வீக ஆற்றல் குறித்து சைவப் பெருமக்கள் உரையாற்றினர். எங்கும் எதிலும் தமிழ் என்ற முறையில கோயில்களிலும் தமிழ் தேவை என்றனர் தமிழ் அமைப்பினர். தமிழுக்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்று தொடங்கிய திரு. சிபிஇராதாகிருஷ்ணன் அவர்கள் தெய்வத்தை ஒப்புக் கொள்வது தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துப் பண்பாடு தமிழ்ப் பண்பாட்டுக்கும் இந்துப் பண்பாட்டுக்கும் எதிரானவர்களை வேரோடு களைந்தெறிவோம் என்று முடித்தார். தமிழில் வழிபாடு தேவை என்று வற்புறுத்தும் தமிழக அரசு, அறிவியலை ஆங்கிலத்தில் தான் கற்பிக்க வேண்டுமென்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது என்றார் அறிஞர் குருசாமி அவர்கள். தமிழில் வழிபாடு தமிழரின் அடிப்படை உரிமை என்ற பொருளில் அறிஞர் கு.ச. ஆனந்தன் அவர்கள் எழுதிய அருமையான சிறுநூலை விசயா பதிப்பகத்தினர் வெளியிட்ட செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டில் ஒன்று

குழந்தையைக் கொன்று கணவன் மனைவி தற்கொலை
மதுரை செல்லூர் முத்துராமலிங்கபுரம் செல்வம் (30) லதா (25)
ஒன்றரை வயது குழந்தை கிருஷ்ணன் பால் வியாபாரம் கடன் தொல்லை.

தற்கொலை செய்து கொள்ளும் கோழைகளுக்குக்
குழந்தையைக் கொல்லத் துணிவு வந்ததா?
குழந்தை வேறு அல்ல. அவர்கள்தாம் குழந்தையின் கொலையும்
அவர்கள் தற்கொலைதான்

விற்ற குழந்தைக்குப் பணம்
பாக்கி வாங்கியவர் கடத்தப்பட்டார்
பெண்ணாடத்தை அடுத்த வேட்டையிருப்பு
கணேசன் (35) லட்சுமி (30) குழந்தை இல்லாதவர்கள்
மேல்புளியங்குடி அம்புஜவல்லி ரூ. 2,000 விலைபேசிக் குழந்தையை
விற்றாள் முதல் தவணை ரூ. 400 மீதித் தொகையை ஒரு மாதம்
கழித்துக் கேட்ட போது கொடுக்காத கணேசனை மூவருடன் வந்த
அம்புஜவல்லியை கடத்தினார் பெண்ணாடம் போலீசில் லட்சுமி
புகார்

குழந்தைகளை விற்கிறார்கள் ஏன் கொல்கிறார்கள்!
பன்றிகளிடமிருந்து குட்டிகளைப் பிரிக்கப் பார்த்திருக்கிறேன்
பாவமாக இருக்கும்!
தாயே பிள்ளையை விற்பது ரூபாய் இரண்டாயிரத்துக்கு

ஆடு, கோழிப் பண்ணைகளைப் போல ஆகிவிடுமா மனிதப் பண்ணை?
ஆகலாம்! உறுப்புகளைத் திருடத் தேவை இல்லை கொலைக் குற்றமும்
இல்லை குழந்தையோ வளர்ந்ததோ விற்பனைக்குக் கிடைக்கும்

மனிதர்கள் மேல் நம்பிக்கையா?
வறட்சி அல்லாமல் எதை வைப்பது?

இவர்கள் இப்படி அழிவதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கலாம்
ஏற்றுக் கொள்ள இருப்பதெல்லாம் இரண்டில் ஒன்றுதான்

நீ இருக்க விரும்புகிறாயா? நீ அழிய விரும்புகிறாயா?
விட்டால்தானே என்கிறாயா?

மனிதர்களிடம் இருந்து மனிதனுக்கே விடுதலை
இறுதிப்போர் இதுவாகத்தான் இருக்கும்
இருக்க வேண்டும்.

–த. பழமலய்

படிப்பகம்

www.padippakam.com



*விற்பனையில்*

## அருந்ததிராய் : பன்முகப் பார்வைகள்

(கட்டுரைத் தொகுப்பு)



**தொகுப்பு மற்றும் மொழியாக்கம் : சி.பி. சதீஷ் கண்ணன்**

பக்கங்கள் 64 விலை ரூ. 20/-

நிகழ், 123, காளீஸ்வரர் நகர், கோயமுத்தூர் - 641 009

## மார்க்சியத்தின் எதிர்காலம்

கட்டுரைகள் : தோழர் சீனிவாசன், கருணாமனோகரன், பொன்னீலன், சோமசேகரன், எஸ்.என். நாகராசன், தியாகு, எல்.என்.மைக்கின்ஸ் வுட்

நிகழ் வெளியீடு டிசம்பர் இறுதியில் வெளிவரும்

ஆசிரியரும் வெளியடுபவரும்

கி.பழனிச்சாமி (ஞானி)

123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009

அச்சாக்கம்

ஜி.எம்.சிஸ்டம்ஸ், 10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர்

படிப்பகம்